பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 13 சனிக்கிழமை 25.02.2023 கதிர் 108

இனி இது ரகசியம் அல்ல!

அண்மையில் அமெரிக்க அதிகாரகள், இராஜதந்திரிகள் அடங்கிய குழு ஒன்று அதன் படைத்துறை விமானங்களில் வந்திறங்கி பாஸ்போர்டோ, விஸாவோ இன்றி நாட்டுக்குள் நுழைந்து வெளியேறியமை பெரும் சர்ச்சையை

2

# இது தேர்தல் வருடம் இல்லை தீர்வைக் காண வாருங்கள்

## எதிர்க் கட்சிகளுக்கு ரணில் அழைப்பு
## நாடாளுமன்றம் தேர்தலை முடிவு செய்யுமாம்



**இந்த வருடம் அரசியல், பொருளாதார ரீதியில் தீர்வைக் காண்பதற்கான வருடம். இது தேர்தலுக்கான வருடம் அல்ல.**

**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

2

## கப்பம் கேட்டால் முறையிடலாம்

யாழ்ப்பாண வர்த்தகர்களிடம் யாராவது கப்பம் கேட்டால் பொலிஸாரிடம் முறையிடுங்கள்

2

## தொடருந்துடன் மோதி முதியவர் பரந்தனில் இறப்பு

தொடருந்துடன் மோதுண்டு முதியவர் உயிரிழந்தார். கிளிநொச்சி பரந்தன் தொடருந்து நிலையத்திற்கு அருகில், யாழ் ராணி

2

## 57 பேருக்கும் விளக்கமறியல்

பௌத்த மற்றும் பாலி பல்கலைக் கழகத்தினை உடனடியாக முழுமையாகத் திறந்துவிடுமாறு

2



## இனியும் மக்களை ஏமாற்ற முடியாது!

### நாட்டை மீட்டெடுக்கக்கூடிய ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியே என்கிறார் சஜித்

ஆர்வப் பேச்சுக்களைப் பேசி இனியும் இந்நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது என்று எதிர்க்கட்சித்

10



## ரணிலின் கருத்துக்கு மஹிந்த கடும் எதிர்ப்பு

### தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தல்

தேர்தலை நடத்தாமல் இருக்கக்கூடாது. நிச்சயம் அது நடத்தப்பட வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள்

10

## தேர்தலை நடத்த வலியுறுத்தி புத்தளத்தில் நேற்று போராட்டம்




உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி புத்தளத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நிதி இல்லாததே தேர்தல் நடத்தப்படாததற்கான காரணம் என்று அரசு சொல்வதால் தேர்தல் நிதி வசூலிப்பும் இந்தப் போராட்டத்தில்

10

## "எமக்கும் காணி தாருங்கள்" யாழ்ப்பாணத்தில் போராட்டம்



யாழ்ப்பாணத்தில் காணியற்று வாழும் தமக்கும் காணிகள் வழங்கவேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை ஆர்ப்பாட்டக்காரர்கள்

10




## அதானியின் காற்றாலைக்கு மன்னாரில் மக்கள் எதிர்ப்பு

இந்தியாவின் அதானி குழுமத்தின் நிறுவனத்தால் மன்னாரில் காற்றாலை அமைக்கப்படுவதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின் உற்பத்தியைத் தொடங்கும் அதானி நிறுவனத்தின் திட்டத்திற்கு இலங்கை முதலீட்டுச் சபை வியாழக்கிழமை அனுமதி வழங்கி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

10

## மின் கட்டணத்தை குறைக்கக் கோரி திங்களன்று தொழிற்சங்க போராட்டம்



மின்கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து பெப்ரவரி 27ஆம் திகதி திங்கட்கிழமை பெரும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இலங்கை

10

### கோட்டாபய விரட்டியடிக்கப்பட்டதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட

## பொலிஸ் ஊரடங்குக்கு எதிரான மனு உயர் நீதிமன்ற விசாரணைக்கு ஏற்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடிப்பதற்குக் காரணமாக இருந்த 2022 ஜுலை ஆர்ப்பாட்டம் கொழும்பு நகர மையத்துக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக பொலிஸார் பிறப்பித்த ஊரடங்கு உத்தரவுக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உயர் நீதிமன்றம் இணங்கியுள்ளது.

இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை வெள்ளிக்கிழமை பரிசீலித்த உயர் நீதிமன்றம், வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதியை வழங்கியது.

நீதியரசர்கள் பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும்

10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்படுத்தியது. அவர்கள் ஏன் வந்தார்கள் எதற்கு வந்தார்கள் என்ற விவரத்தை ஆட்சியாளர்கள் வெளியிடாமல் மூடி மறைத்து வருகின்றார்கள்.

அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கூட இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி மறைமுகமாகப் பெரிய பெரிய விடயங்கள் எல்லாம் நடக்கின்றன என்று சொல்லியிருந்தார். பூகோள அரசியல், புவிசார் அரசியல் என்றெல்லாம் தமிழ் மக்களோடு மல்லுக்கட்டும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இந்த அமெரிக்க வருகையின் பின்னணியோ உள்ளடக்கமோ எதுவும் தெரியாது.

இருப்பினும் அமெரிக்கத் தரப்பின் வருகையில் பாதுகாப்பு விவகாரங்களே அதிகம் தொடர்புபட்டிருக்கும் என்பதை ஊகிப்பது ஒன்றும் கடினமானதல்ல. சீனாவிற்கு எதிரான நிலைப்பாட்டில் தனது இராணுவக் கரங்களைப் பலப்படுத்துவதில் அமெரிக்க தீவிரமாக இருக்கின்றது.

ரஷ்ய – உக்ரைன் போரில் இவ்வளவு நாளும் ரஷ்யாவுக்கு தார்மீக ஆயுத உதவிகளை வழங்கி வந்த சீனா இனி ஆயுத உதவிகளையும் வழங்கக்கூடும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்திருக்கிறார். உக்ரைனுக்கு பக்கபலமாக, பின்புலமாக எப்படி அமெரிக்காவும் மேற்குநாடுகளும் செயற்படுகின்றனவோ அதேபோன்று சீனாவும் ரஷ்யாவுக்குப் பக்க பலமாக, பின்புலமாகச் செயற்படும் என்பதே அதன் அர்த்தம்.

இத்தகைய நிலையில் அமெரிக்கா தனது இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையைத் தளமாகக் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவு படுத்த முற்படும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதுவே இப்போது – நடந்துகொண்டுமிருப்பது. ஏற்கனவே ஐ.நா. அழுத்தம், கடன் அழுத்தம், கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் ஒத்துழைப்பு போதியளவில் கிட்டாதது என்று அல்லல்படும் இலங்கையை தனது பாதுகாப்பு வலைக்குள் வீழ்த்துவது அமெரிக்காவுக்கு ஒன்றும் கடினமான காரியமுமல்ல.

அதுபோன்றே இந்தியாவும். கடன் கொடுப்பது, கை கொடுப்பது எல்லாவற்றுக்கும் அப்பால் இப்போது இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பைத் தீவிரப்படுத்துவதற்கான இணக்கம் இரு நாடுகளுக்குள்ளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையில் தரைப் படைப் பயிற்சிகளை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. புதுடில்லியில் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்திய – இலங்கை பாதுகாப்புப் பேச்சுக்களின் 7ஆவது அமர்வில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கூட்டுப் பயிற்சிகளை அதிகரிக்கவும் இரு தரப்பு அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்கும் அவை இணங்கியுள்ளன.

நாடுகள் தங்கள் தங்கள் நலன்களில் சரியாகவும் கவனமாகவும் இருக்கின்றன. ஆனால் அந்த நலன்களை அவை கவனிக்கையில் தமிழர்களுக்குத் தீர்வு பழம் நழுவிப் பாலில் விழுவதைப் போலத் தங்கள் கைகளுக்கு வரும் என்று இலவு காத்த கிளிகளாக தமிழ்க் கட்சிகள் காத்துக்கிடக்கின்றன. என்ன செய்வது நமது தலைவிதி, 'டிசைன்' அப்படி.

*****

தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. மார்ச் 9 தேர்தல் நடக்காது. ஆனால் அது எப்போது நடக்கும் என்பதை மார்ச் 3ஆம் திகதி முடிவு செய்வோம் என்கிறது தேர்தல் ஆணைக்குழு. ஆனால், அது இந்த வருடத்தில் இல்லை, நாடாளுமன்றம்தான் அது பற்றி முடிவு செய்யும் என்கிற முடிவில் ரணிலும் அழுத்தம் திருத்தமாக இருக்கிறார். மொத்தத்தில் ரணில் சொல்வதுதானே நடக்கப்போகிறது. எதிர்க்கட்சிகள் மாரித்தவளைகள் போன்று என்னதான் கத்தினாலும், தேர்தல் எப்படியும் இந்த வருடத்திலோ இன்னும் சொல்லப்போனால் அடுத்த வருடத்திலோகூட நடக்காது என்றே நம்பலாம்.

இப்போது ஓடியாடி பரப்புரை செய்தவர்களும் தேர்தலை எதிர்கொள்வதற்கு வியூகம் வகுத்தவர்களும் என்ன செய்யப்போகிறார்கள். அடுத்த தேர்தல் வரைக்குமாவது இவர்கள் எல்லோரும் கூடிக் குலாவிக்கொண்டு "தமிழ் மக்களின் நன்மைக்காக" என்று படத்துக்கு ஒன்றாக போஸ் குடுத்தபடி 10 கட்சிகள் கூட்டு என்று வதைக்காமல் இருந்தார்கள் என்றாலாவது பரவாயில்லை.

தேர்தலை நிறுத்திய ரணிலின் நடவடிக்கையால் அதிகம் நட்டப்பட்டிருப்பது அமுல் பேபி போன்றவர்கள்தான். ஏனெனில் ஒவ்வொரு தேர்தலின்போதும் ஒரே உத்தியைக் கடைப்பிடிக்கும் அவரது தரப்பினர் இனி மீண்டும் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்போது – என்ன செய்வார்களோ தெரியாது.

வழக்கமாக வேலை வாய்ப்புத் தேடுபவர்களை இலக்கு வைத்தும் பட்டதாரிகளை இலக்கு வைத்தும் செயற்படும் அமுல் பேபி தரப்பு இந்தத் தடவை மாணவர்களை இலக்குவைத்திருந்தது. ஆனால் ஒரே வாக்குறுதிதான். வேலை வாங்கித்தருகின்றோம் என்கிற வாக்குறுதிதான் அது. இந்தத் தடவை தொழிற் பயிற்சிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் விவரங்களை அதிகாரிகளை அதட்டி உருட்டிப் பெற்ற அமுல் பேபி தரப்பு, அதிலிருந்தவர்களைத் தொடர்பு கொண்டு தேர்தல் வேலைக்கு வாருங்கள், உங்களுக்கு வேலை வாங்கித் தருகின்றோம் என்று அழைத்திருக்கிறார்கள்.

அப்படி அமுல் பேபி தரப்பு காட்டிய ஆசை வார்த்தைகளை நம்பிய ஒருத்தர் தான் பார்த்துக்கொண்டிருந்த வேலையிலிருந்து ஒரு மாதம் லீவு கேட்டிருக்கிறார். முதலாளி எதற்கு என்று கேட்க, இப்படி தேர்தல் வேலைக்கு வந்தால் பின்னர் அரசு வேலை வாங்கித்தரலாம் என்று அழைப்பெடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். கோபமடைந்த முதலாளியோ "அவங்கள் இப்படித்தான் காலங் காலமா எல்லாரையும் எமாத்திக்கொண்டு திரியுறாங்கள். புத்தியில்லாம் அங்கையே திரும்பத் திரும்பப் போய் விழுந்துகிடவுங்கோ, இந்தப் பக்கம் வரக்கூடாது" என்று அடிச்சுக் கலைக்காத குறையா ஆளை அனுப்பிப்போட்டார்.

பாவம் அந்தப் பெடி. இப்ப இருந்த வேலையும் இல்லை, அமுல் பேபி தரப்பும் இனி ஒரு மாதத்துக்கு எண்டாலும் தேர்தல் வேலை எண்டு காசும் குடுக்காது, அரச வேலை எப்பிடியும் கிடைக்கப்போறதில்லை, என்னதான் செய்யப் போகுதோ!

இருக்கிற அரச ஊழியருக்கே சம்பளம் குடுக்கவழியில்லை என்று ரணிலும் மற்றவர்களும் என்னதான் அழுது வடிஞ்சாலும் அரசாங்க வேலை வாங்கித்தாறன் எண்டு எங்கடையாக்களை இலகுவா ஏமாத்திப்போடலாம் பாருங்கோ!

**- இடிமின்னல் -**

## இது தேர்தல் வருடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றம் தீர்க்கமான முடிவு ஒன்றை விரைவில் எடுக்கும். எனவே, மக்கள் குழப்பம் அடையத் தேவையில்லை – என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீர்வைக் காண ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சிகளுக்கு நான் பல தடவைகள் அழைப்பு விடுத்தபோதிலும் அது தொடர்பில் அக்கறை செலுத்தாத அந்தக் கட்சிகள், தேர்தல் வேண்டும் என்று கோரி காலத்தை இழுத்தடிக்க முனைகின்றன.

அரசியல் தீர்வையும், பொருளாதாரத் தீர்வையும் விரும்பாத எதிர்க்கட்சிகள், தங்கள் சுயநலன்களுக்காகவே இல்லாத தேர்தல் ஒன்றைக் கோரி வருகின்றன.

நாடு பொருளாதார ரீதியில் பெரும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் – இவ் வருடம் தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்று அறிந்து கொண்டும் தேர்தல் வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அடம்பிடிக்கின்றன.

எதிர்க் கட்சிகளின் கோமாளித்தன அரசியலுக்குள் தேர்தல்கள் ஆணைக் குழுவும் சிக்கியுள்ளது. அதனால்தான் அந்த ஆணைக்குழு வாரத்துக்கு ஒருமுறை ஒவ்வொரு அறிவிப்புக்களை விடுத்து வருகின்றது. – என்றார்.

## கப்பம் கேட்டால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித் தார் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன.

யாழ்ப்பாண வர்த்தகர்களுடன் வெள்ளிக்கிழமை நடந்த சதிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். தெரிவித்திருந்தார்.

யாழ். நகரப் பகுதியில் உள்ள பசார் வீதியில் காணப்படும் மிகையான போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது. சந்திப்பில் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் உரையாற்றிய மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்ததாவது:

வர்த்தகர்களிடம் கப்பம் கோரப்பட்டால் அல்லது வியாபாரத்துக்கு இடையூறுவிளைவிக்கப்பட்டால் உடனடியாகத் எந்தவிதத் தயக்கமும் இன்றி முறையிடலாம்.

யாழ். பொலிஸ் நிலையத்திலோ, முத்த பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலோ பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலோ இது தொடர்பாக முறையிட முடியும்.

முறைப்பாடுகள் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். வர்த்தகர்கள் முறைப்பாடு செய்வதற்கு எந்த விதத் தயக்கமும் கொள்ளத் தேவையில்லை. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்றார்.

யாழ். நகரின் மத்தியிலுள்ள பசார் வீதியில் ஒரு வழிப் பாதையாக்கி வாகனங்கள் தரிக்கச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு வியாபார நடவடிக்கைகளைப் பாதிப்பதாக சந்திப்பில் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

ஒன்றுவிட்டு ஒரு நாள் ஒரு பக்கம் என்கிற வகையில் இப்போது அந்த இடத்தில் வாகனங்கள் தரிக்க விடப்படுகின்றன. அப்படித் தரிக்க விடப்படும் வாகனங்கள் கடைகளுக்கு மக்கள் வர முடியாதவாறு நிறுத்தப்படுவதால் பாதிப்பு ஏற்படுகின்றது என்று வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர். கடைகளுக்கு மக்கள் வரக்கூடியவாறு இடம்விட்டு வாகனங்கள் தரிப்பதற்கு ஏற்ற வசதி செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதை ஏற்றுக்கொண்ட பொலிஸார், இது தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து யாசகம் பெற வருவோரும், சாம்பிராணி விற்க வருவோரும் இந்தப் பகுதியில் செயற்படுவது வியாபரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

## 57 பேருக்கும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வலியுறுத்தி கல்வி அமைச்சிற்குள் பலவந்தமாகப் புகுந்து போராட்டம் நடத்தியபோது கைது செய்யப்பட்ட பிக்குள் உள்ளிட்ட 57 பேரும் நீதிமன்றக் காவலில் வைக் கப்பட்டனர்.

கல்வி அமைச்சு வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் அனைவரையும் வியாழக் கிழமை பொலிஸார் கைது செய்தனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேயும் 48 பௌத்த பிக்குகள் உள்ளடங்கலாக 57 பேரையும் பெப்ரவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் உத்தரவிட்டார்.

மாணவர் குழுக்களிடையிலான மோதலை அடுத்து மூடப்பட் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தினை மீள திறக்குமாறு வலியுறுத்தி கடந்த சில வாரங்களாகவே மாணவர்கள் தொடர்போராட்டங்களை நடத்திவருகின்றனர். எனினும் பல்கலைக்கழகம் முதலாண்டு மாணவர்களுக்கு மட்டுமே இப்போதைக்குத் திறக்கப்படும் என்று துணைவேந்தர் தெரிவித்துள்ளார். அதனை எதிர்த்து அனைத்து வருட மாணவர்களுக்காகவும் பல்கலைக் கழகத்தை திறக்கவேண்டும் என்று போராட்டக்காரர்கள் கூறுகின்றனர். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவின் முடிவுப்படி பல்கலைக்கழகம் படிப்படியாகத்தான் ஏனைய மாணவர்களுக்குத் திறந்துவிடப்படும் என்று துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# ஆளுங்கட்சிக்குப் பின்னடைவு ஏற்படும் அந்த அச்சமே தேர்தலை தவிர்க்க காரணம்




பொதுஜன பெரமுன கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டு விடும் என்பதாலே மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்படவிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத்தெரிவுசெய்யவிடாமல்அந்ததேர்தலையே தவிர்த்து வருகிறார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றம் சாட்டியுள்ளார். மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை இடைநிறுத்தியமைக்கு ஜனாதிபதி கூறும் காரணம் பணமில்லை என்பதே. இதில் என்ன வேடிக்கையான விடயம் என்றால் சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினத்தைக் கொண்டாட கோடிக்கணக் கில் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதை விட சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதன் ஊடாகவே தனக்கு அரசியல் ரீதியாக இலாபம் கிடைக்கும் என்றே அவர் இவ்வாறு செலவிட்டுள்ளார்.

அத்துடன் தற்போதைய நிலையில் தேர்தலை எதிர்கொண்டால் பொதுஜன பெரமுன கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பாரிய பின்னடைவு ஏற்பட்டு எதிர்க் கட்சிகள் மக்கள் ஆணையைப் பெற்றுவிடும். அதன் ஊடாக நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய சங்கடமான சூழ்நிலை தனக்கு ஏற்பட்டு விடும் என்றறிந்தே ஜனாதிபதி தேர்தலைத் தவிர்த்து வருகின்றார்.

மொட்டுக் கட்சியினரும், ஐக்கிய தேசிய கட்சியினரும் தங்களுக்கு ஏற்படப்போகும் தோல்வியை முன்கூட்டியே அனுமானித்து தங்களின் சுயலாபத்துக்காக வேண்டியே இந்தத் தேர்தலை பிற்போட்டிருக்கின்றார்கள் எனத் தெரிவித்ததுடன் அதனது விளைவுகளை ஜனாதிபதி மக்கள் போராட்டங்களின் மூலம் எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் எச்சரித்துள்ளார்.

# மேய்ச்சல் தரவை இன்றி மாந்தை கிழக்கில் அவதி



(ஜெகதீஸ்வரன் பிராந்த்)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு செலவபுரம் கிராமத்தில் மேய்ச்சல் தரவையை உருவாக்கித் தருமாறு கிராமத்தின் கால்நடை வளர்ப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கில் பாண்டியன்குளம், செல்வபுரம் கிராமங்களில் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் இதற்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இந்தப் பகுதிகளில் காலபோகம், சிறுபோகம் என இரு போகங்களிலும் பயிர்ச் செய்கை நடைபெறுவதன் காரணமாக கால்நடைகளை வீதியின் இருமருங்குகளிலும் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டியுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இல்லையேல் நீண்ட தூரங்களுக்கு கால்நடைகளை அழைத்துச் செல்லவேண்டியிருப்பதாக வும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கால் நடைகளை வீதிகளில் விட்டு மேய்ப்பதினால் வாகனங்களில் மோதுண்டு அவை உயிரிழப்பதாகவும் தெரிவிக்கும் இக்கிராம கால்நடை வளர்ப்பாளர்கள் தமக்கான மேய்ச்சல் தரவையினை உருவாக்கித் தருமாறும் கோரியுள்ளனர்.

நீண்ட காலமாகத் தாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றபோதும் இதுவரை அது தொடர்பில் அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

குத்தகை அடிப்படையில் விவசாயத்திற்குக் காணிகளை வழங்கிக்கொண்டிருக்கும் பிரதேச செயலகமும் கால்நடை வளர்ப்பாளர்கள் மீது கரிசனை கொள்வதில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடைகள் பால் சுரக்கும் வீதம் குறைவடைகின்றது என்றும் தமது பொருளாதாரம் கால்நடைகளிலே தங்கியிருக்கின்றது எனவும் கவலை தெரிவிக்கின்றனர்

விவசாயத்தினையும் கால்நடை வளர்ப்பையும் வாழ்வாதாரமாகக் கொண்ட இந்த கிராமத்தில் மேய்ச்சல் தரவை அமைக்கப்படுவது அவசியமாகும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

## நீர்க் கட்டண நிலுவை இதுவரை ரூ. 840 கோடி

**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவிப்பு**

நுகர்வோரிடமிருந்து 840 கோடி ரூபா நிலுவை கட்டணத்தை அறவிட வேண்டியுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், நீர் கட்டணம் செலுத்துவது 40 சதவீதம் குறைவடைந்துள்ள தாகவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அதில் 620 கோடி ரூபா கட்டணத்தை வீட்டு நீர் பாவனையாளர்களே செலுத்த வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மின் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், நீர் கட்டணத்தையும் அதிகரிப்பதற்கான பிரேரணை தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கால்நடைக் களஞ்சியத்தைக் கவனியுங்கள்

இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கா மாசி மாதம் இரண்டாம் வாரத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு திரும்பும் வழியில் கிளிநொச்சிக்கும் சென்றார். அங்கு மக்களிடம் பேசிய அவர், எதிர்காலத்தில் இலங்கையின் நெற் களஞ்சியமாக வடக்கு மாகாணத்தை மாற்றும் திட்டம் ஆட்சியாளர்களுக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

வடக்கு பெரும்பாலும் வானம் பார்த்த பூமி. இங்கு ஆற்று நீரோ இயற்கையான நன்னீர் நிலைகளோ இல்லை. அதனால் வடக்கை நெற்களஞ்சியமாக மாற்றும் திட்டம் வெளி இடங்களிலில் இருந்து தண்ணீரை வடக்குக்குக் கொண்டுவரும் திட்டத்திலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது. அத்தகைய திட்டங்களில் தற்போது நடைமுறையில் இருப்பது மகாவலி ஆற்றுத் திட்டம். ஆனால், அந்தத் திட்டம் குறித்து தமிழ் மக்களுக்கு பெரும் சந்தேகங்களும், அச்சமும் இருக்கின்றன.

அத்தகைய சந்தேகங்களுக்குத் தீர்வு கண்டு, மகாவலி ஆற்றுத் தண்ணீரை அல்லது வேறு ஏதாவது ஒரு ஆற்றுத் தண்ணீரை வடக்கு நோக்கித் திருப்பி அவற்றை நீர் நிலைகளில் தேக்கி, அதன் மூலம் வருடத்திற்கு மூன்று போகம் நெல் விளைவிக்கும் நிலைமை ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே வடக்கு மாகாணம் மொத்த நாட்டுக்கும் நெல்லை வழங்கக்கூடிய களஞ்சியமாக மாறும். அதற்கு இன்னும் எத்தனை காலமும் எத்தனை அரச தலைவர்களும் வரவேண்டுமோ தெரியாது.

ஆனால், வடக்கு மாகாணம் தற்போதே நாட்டின் உணவு விநியோகத்தில் குறிப்பிடத்தகுந்த களஞ்சியமாக இருந்து வருகின்றது. அதனை அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வளர்த்தெடுப்பது குறித்து யாரும் அக்கறைப்படவில்லை.

நாட்டின் இறைச்சித் தேவையில் 60 சதவீதத்தை வடக்கு கிழக்கு பகுதிகளே பூர்த்தி செய்து வருகின்றது. அதாவது வடக்கு கிழக்கில் இருந்தே நாட்டின் மற்றைய பகுதிகளுக்கு கால்நடை இறைச்சி, குறிப்பாக ஆடு மற்றும் மாட்டிறைச்சிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களுக்கு கணிசமான வருவாய் கிடைக்கின்றது.

மலை நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் இருந்து பெருமளவு பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு பெரும் தொகைப் பணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், நாட்டின் இறைச்சித் தேவையில் 60 சதவீத்த்தைப் பூர்த்தி செய்யும் வடக்கு கிழக்கில் இறைச்சித் தேவைக்கான கால்நடை உற்பத்தியின் மீது கவனம் செலுத்தப்படவில்லை என்பது கண்கூடு. விசனத்துக்குரியது.

நிறைபோசாக்கான இலகுவில் கிடைக்கக்கூடிய உணவு இறைச்சி. பால் மற்றும் முட்டை எந்தளவிற்கு நிறையுணவில் முக்கிய பங்கை வகிக்கின்றதோ அதேயளவிற்கு இறைச்சியும் முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே இறைச்சி உற்பத்தியின் மீது அதிக கவனமும் முதலீடும் அபிவிருத்தி நடவடிக்கையும் தேவை. அதற்கான வாய்ப்பும் வசதிகளும் இருந்தும் வடக்கிலும் கிழக்கிலும் யாரும் அதன் மீது கவனம் செலுத்துவதில்லை.

இங்குள்ள கால்நடை உற்பத்தியாளர்கள் தமக்கு மேய்ச்சல் தரவை இல்லை என்று நீண்ட பல வருடங்களாகக் குறைப்பட்டு வருகின்றார்கள். விவசாயத்தை அதிகரிக்கக் அதிகரிக்க அவர்களின் மேய்ச்சல் தரைகள் சுருங்கி வருகின்றன. இது பெரும் பிரச்சினையை உருவாக்குகின்றது. கால்நடை உற்பத்தியாளர்களுக்குப் பாதிப்பை உருவாக்குகின்றது. இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணாவில்லை என்றால் வடபகுதியின் பெரும் ஏற்றுமதித் தொழில் ஒன்று விரைவில் படுத்துக் காணாமல் போய்விடும்.

நெற்களஞ்சியமாக வடக்கை மாற்றுவதற்கு முதலில் ஏற்கனவே கால்நடைகளின் கஞ்சியமாக இருக்கும் வடக்கில் அதனைப் பெருக்குவதற்கும் தொழில்முறையில் அதனை வளர்த்தெடுப்பதற்குமான திட்டங்களையும் முதலீடுகளையும் கொண்டு வருவதில் ஆளுநரும் அதிகாரிகளும் அக்கறை காட்டவேண்டும்.

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்த சட்டரீதியான தடை ஏதுமில்லை

## என்கிறார் ரோஹண ஹெட்டியாராச்சி




தேர்தலை நடத்துவதற்கான சட்டரீதியான தடைகள் எதுவுமில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க கோரும் மனுவை உயர்நீதிமன்றம் மே 11 ஆம் திகதி வரை பிற்போட்டுள்ளதே தவிர தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியான தடை எவையுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் யதார்த்தத்தில் அரசாங்கம் நிதியை சுற்றுநிரூபங்கள் மூலம் தடை செய்கின்றது என தெரிவித்துள்ள ரோஹண ஹெட்டியாராச்சி, எங்கள் நாடாளுமன்ற தலைவர்களால் மக்களின் வாக்குரிமை கேள்விக்குட்படுத்தப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பான விடயங்களுக்காக ஏற்கனவே 50 கோடிக்கு மேல் செல விட்டுள்ளனர். இது பொதுமக்களின் பணம் என குறிப்பிட்டுள்ள பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர், தேர்தல் நடைபெறாவிட்டால் இந்த பணத்தை வீணடித்தமைக்கான பொறுப்பை அரசியல் தலைமையும் அரசாங்க அதிகாரிகளும் ஏற்பார்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இஸ்ரேலில் தொழில் வழங்குவதாகக்கூறி பண மோசடியில் ஈடுபட்டவர் சிக்கினார்

இஸ்ரேல் நாட்டில் தாதியர் தொழில் வழங்கப்படும் என்று கூறி, அரச இலட்சினை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் போலி முத்திரைகளுடன் தயாரிக்கப்பட்ட போலி விண்ணப்பங்களை வழங்கி இளைஞர்களை தவறாக வழிநடத்தி பண மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர் பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், குறித்த சந்தேக நபர் கட்டணமாக ஒருவரிடமிருந்து தலா 4 லட்சம் ரூபா பணத்தை பெற்றுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

குளியாபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது தெரியவந்த தகவலின் அடிப்படையில் அத்துரிகிரிய பிரதேசத்தை சேர்ந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# சமுர்த்தி அலுவலர் என ஏமாற்றி பணத்தை ஏப்பம்விட்ட கில்லாடி

தென்மராட்சி, பெப். 25

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவிலில் வியாழக்கிழமை காலை சமுர்த்தி உத்தியோகத்தர் போன்று பாசாங்கு செய்த நபர் இரண்டு வீடுகளில் ஏமாற்றிப் பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டுவில் கிராமத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்கு சென்ற நபரொருவர் கிராமத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் எனத் தன்னை அறிமுகப்படுத்தி புதிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும்,

ஒரே தடவையில் இருபதாயிரத்தை செலுத்தி மாதாந்தம் ஐயாயிரம் என்ற உதவித்தொகையை தொடர்ச்சியாக பெற முடியும் எனவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை நம்பி பெண்ணொருவர் 20 ஆயிரம் ரூபாவையும், மற்றொரு பெண் 15 ஆயிரம் ரூபாவையும் அந்த நபரிடம் கொடுத்துள்ளனர்.

அதன் பின்னர் சந்தேகமடைந்து சமுர்த்தி உத்தியோகத்தரை தொடர்பு கொண்ட போதே தாம் ஏமாற்றப்பட்டதனை அறிந்து கொண்டனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்ற நூதன ஏமாற்று சுன்னாகம், மல்லாகம் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளதாகவும் அங்கு வீட்டில் உள்ள வயதானவர்களை இலக்கு வைத்து ஒரு நபர் இந்த ஏமாற்று நாடகத்தை நிகழ்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒன்றரை கிலோ கஞ்சாவுடன் ஒருவர் அநுராதபுரத்தில் கைது

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸை பொலிஸார் சோதனையிட்டதில், பயணியொருவர் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த ஒன்றரை கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அநுராதபுரத்தின் பூனேவ பொலிஸ் நிலைய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலுக்கு அமைய, கடந்த வியாழக்கிழமை யாழிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிய சென்றுக்கொண்டிருந்த பஸ்ஸை சோதனையிட்டபோது, சந்தேக நபரிடமிருந்து ஒன்றரை கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பெரிய நீலாவணையைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் ஆவார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பட்டிருப்புக் வலயத்தில் அழகியல்பாட அடைவை உயர்த்த நடவடிக்கை







(பழுவூரான்)

பட்டிருப்பு கல்வி வலயத்தில் அழகியல் பாடங்களின் பெறுபேற்றினை உயர்த்துவதற்கான விசேட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பட்டிருப்பு கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பட்டிருப்பு கல்வி வலய நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனுசியா ராஜ சேகர் மற்றும் அழகியல் பாடங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியகள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் எதிர்வரும் கல்வி ஆண்டுகளில் தரம் 10,11 ஆகிய தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அழகியற் பாடங்களின் பெறுபேற்றினை உயர்த்துவதற்கான இரு வருட விசேட செயற்றிட்டத்தினை நடை முறைப்படுத்துவற்கான முன்மொழிவுகள் மற்றும் அழகியற் கலைக் கூடத்தினை கல்வி வலயத்தில் நடை முறைப்படுத்துதல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# விளையாட்டு துறை இலவச பயிற்சிகள்!

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 25 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் பாலாருக்கான விளையாட்டுத் துறை சார்ந்த பின்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிகள் துறைசார்ந்த பயிற்றுவிப்பாளர்களால் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் தங்களது பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நேரடியாகவோ அல்லது வட்ஸ் அப் ஊடாகவோ 0763119485, 0761899651, 0760503863 சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:

வயது: விரும்பும் பயிற்சி நெறி: வலைப்பந்து, துடுப்பாட்டம், துடுப்பாட்டம் ( கடினப்பந்து 12 வயதுக்குட்பட்டோர்), உதைபந்து, நீச்சல், தற்காப்புக் கலை, கரப்பந்து, கூடைப்பந்து மேசைப்பந்து, மெய்வல்லுநர்

வதிவிட முகவரி:

தொலைபேசி இலக்கம்:-

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 221 5054, 021 224 5064

# நகைகள் கொள்ளை

பதுளை, பொரலந்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த பெண் ஒருவர் அங்கிருந்த பெண்ணின் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தடவி, அவ ரின் கழுத்தை நெரித்து 3 லட்சத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளப் எள போகஹகும்புர பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் கைது செய்யயப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

72 வயதான மேற்படி பெண் தனது வீட்டு சமையல் அறையில் சமையல் செய்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த ஒருவர் மிளகாய் பொடியை கண்ணில் தடவி அவரது கழுத்தை நெரித்து கழுத்தில் காணப்பட்ட தங்க நகைகளே இவ்வாறு கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது சந்தேக நபரால் அபகரிக்கப்பட்ட தங்க நகைகளில் ஒன்று அங்கு காணப்பட்ட பாத்திரத்தில் கிடந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-** யுடியூப்பில் (youtube) இல் உலாவரும் திருச்சி கல்யாணராமன் அவர்களின் சர்ச்சைக்குரிய பேச்சைக் கேட்டீர்களா?

**உலக்கையார் பதில்:-** கேட்டுத் தலைகுனிந்தேன்! எத்துணை வக்கிரமான பேச்சு அது. ஐயா, சமயப் பேச்சாளர்கள் அனைவரையும் தலைகுனிய வைத்து விட்டார். ஜாதி என்னும் எல்லையைக் கடக்க முடியாத அவரது புத்தியின் வக்கிரம் கவலை தந்தது. 'உலகெலாம்' என்றும், 'உலகம் யாவையும்' என்றும், 'உலகம் உவப்ப' என்றும், உலகம் தழுவி நின்ற நமது இந்து சமயம் எனும் விரிந்த ஆகாயத்தை, தன்னுடைய பிராமண ஜாதி எனும் சிறு குடுவையுள் அடக்க நினைத்து, அவர் பேசிய பேச்சு கவலை தந்தது.

தன் ஜாதியை உயர்த்துவதைக்கூடத் தவறென்று நான் சொல்லமாட்டேன். அது அவரவர் உரிமை. தமிழ்நாட்டில் எல்லோரும் இன்று அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர் ஜாதியைத் தாழ்த்தி, தன் ஜாதியை உயர்த்த நினைத்தது மன்னிக்க முடியாத குற்றமேயாம். சொல்லவரும் விடயத்தைப் புத்தியிலிருந்து வெளிப்படுத்த நினைக்காமல் வாயிலிருந்தே வெளிவிடும் பழக்கம் இப்போது அங்கு பலருக்கும் வந்துவிட்டது.

'நீ பிழை செய்யத்தான்வேண்டும்;' என்ற அவரது வார்த்தைகளைக் கேட்டு உடம்பெல்லாம் கூசிப் போனேன். கண்ணப்பர், திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் போன்றோரை 'ஐயர்' என்று அழைத்துக் கௌரவித்த சேக்கிழார் எங்கே? இவர் எங்கே?

அந்தக் கூட்டம் ஒரு பிராமண சங்கத்தில் நடந்ததாம். ஜாதிச் சங்கத்தில் நடந்தால் எதையும் பேசி விடலாமா என்ன? அங்கல்லவா இன்னும் அவர் கவனமாகப் பேசியிருக்கவேண்டும். வேறெங்கும் பேசியிருந்தால் அது அவரை மட்டும் பாதித்திருக்கும். பிராமண சங்கத்தில் பேசியபடியால் அந்தக் கருத்து அச் சங்கத்தார் அனைவரதும் கருத்தாக அல்லவா கருதப்படும்.

இத்தனைக்கும் நிரம்பப் படித்தவர் அவர். நீண்ட நாட்களாகப் பேசி வரும் அனுபவம் கொண்டவர். வயதிலும் முதிர்ந்தவர். இவர் மனதில் இத்தகைய ஒரு நெருஞ்சி முட்செடி படர்ந்து கிடப்பது அதிசயம்தான். 'கங்கையாடிலென்? 'காவிரியாடிலென்?', 'கரவாகிய கல்வியுலார்' என்பதான அருளாளர்தம் அடிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

எதிராளிகள் பிராமண எதிர்ப்புக்கான காரணங்களை மூலைமுடுக்குகள் எல்லாம் தேடிக் கொண்டிருக்க, பட்டப்பகலில் வெட்டவெளிச்சத்தில் அவர்தமக்கான நியாயங்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார் ஐயர். இவர்தான் முன்பொருமுறை பெண்ணாயிருந்தும் மந்திரங்களைப் பாடி வெளியிட்டபடியால்த்தான் எம்.எஸ். அம்மா கடைசிக் காலத்தில் நோயால் வருந்தினார் என்று சொன்னதாய் ஞாபகம். என் ஞாபகம் சரியானால், ஜாதியின் பெயரால் அழுக்குகளுக்குக் குடைபிடிக்கும் ஐயர் இவர் என்பது நிஜமாகிறது. மொத்தத்தில் தான் சொன்ன நல்லதான ஓரிரு கருத்துக்களையும் பின் சொன்ன அழுக்குகளால் மாசுபடுத்தி விட்டார் அவர்.

வெஞ்சின விதியை வெல்ல வல்லமோ என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

முக்கியமாக ஒன்றைச் சொல்லவேண்டும். தனது சொற்பொழிவின் போது ஐயா அவர்களின் உடல் மொழி **(body language)** மிகக் கேவலமாயும் கோமாளித்தனமாயும் இருக்கிறது.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தைச் சொல்ல? இவர் நல்ல வேடிக்கை மனிதர் தானுங்கோ.**

**2. உரலார் கேள்வி:-** 'அத்தைக்கு மீசை முளைத்தால்' – சுகி சிவம் அவர்களின் பேச்சைக் கேட்டீர்களா?

**உலக்கையார் பதில்:-** நான் மதித்துப் போற்றும் பேச்சாளர்களில் ஒருவர் அவர். எதையும் ஆழமாகச் சிந்தித்துப் பேசுகிற இயல்புடையவர். இன்றைய பேச்சாளர்களில் தலைமைப் பேச்சாளர் அவர் என்று கூடச் சொல்லாம். அப்படிப்பட்ட அவரது கருத்தை விமர்சிக்க எனக்குத் தகுதி இருப்பதாய்த் தோன்றவில்லை. அதனால் உங்களது கேள்விக்கு எனது பதில் வெறும் மௌனமேயாம். ஆனால் ஒன்று இந்த மௌனத்தைச் சம்மதத்திற்கான அடையாளமாய்க் கொண்டு விடாதீர்கள்.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்ட கதைதானுங்கோவ்..வ்..வ்**

**3. உரலார் கேள்வி:-** தம்மைச் சந்தித்த சிங்கள இளைஞர்களிடம், 'நாம் செய்த பாவத்திற்குக் கிடைத்த பரிசுதான் இது' என்று, ஜனாதிபதி ரணில் சொன்னாராமே?

**உலக்கையார் பதில்:-** அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தும் இதுவரை அந்தப் பாவத்திற்கான நிவாரணம் ஏதும் செய்யாவிட்டாலும், நடந்தவை பாவம் என்று சொல்லத் துணிந்ததற்காக அவரைப் பாராட்டலாம். பிழை செய்துவிட்டோம் என்று தெரிந்து கொள்வதுதான் அப் பிழையிலிருந்து மீள்வதற்கான முதல் வழி. இவ்வளவு காலம், இவ்வளவு அழிவு, இவ்வளவு வீழ்ச்சி என இவற்றையெல்லாம் அள்ளிக் கொடுத்ததன் பின்னர்தான் நடந்தது பிழை என்னும் ஞானம் உதித்திருக்கிறது. இந்த ஞானம் தானும் நிலைக்குமா? என்பது முதற்ஸகேள்வி. நிலைத்தாலும் அந்தப் பாவத்திற்கான பரிகாரத்தை எப்போது செய்யப் போகிறார்? இது அடுத்த கேள்வி. பதில்களுக்காகக் காலத்தோடு சேர்ந்து நாமும் காத்திருப்போம்.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தைச் சொல்ல? இதுநாள் வரை தமிழருக்குச் செய்தவை சரிதான் என்று சொல்லும் எத்தனை பிரகிருதிகள் இன்னும் நாடாளுமன்றத்திற்குள் குந்தியிருக்கின்றன பாருங்கோ.**

**4. உரலார் கேள்வி:-** உதயன் பத்திரிகையில் வந்த கம்பன் விழாப் பற்றிய விமர்சனத்தைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** விழாவின் வெற்றியின் பின்னராக வெளிவரும் கண்டன விமர்சனங்கள் அனைத்தையும் படித்து வருகிறேன். அந்தக் கண்டனங்கள் எங்கள் வெற்றியை உறுதி செய்யும் சாசனங்கள். அதனால் அவை எமக்கு மகிழ்ச்சியையே தருகின்றன. எங்களுக்கு இரண்டு விதமான பகைவர்கள் இருக்கிறார்கள். கழகத்திற்கு உள்ளே வர முயன்று இடம் கிடைக்காமற் போனவர்கள் அவர்களில் ஒரு வகை. உள்ளே வந்து வெளியே துரத்தப்பட்டவர்கள் இன்னொரு வகை. இவ்விருவருக்கும் கழகமும், விழாவும் அல்ல பிரச்சினை. நாங்கள்தான் பிரச்சினை. நாங்கள் எப்படியும் வீழ்ந்துவிடவேண்டும் என்று விரும்புகிறவர்கள் அவர்கள். அதனால் நாங்கள் வளர, வளர அவர்கள் தேய்கிறார்கள். தேய்வின்போது வலி உண்டாதல் இயல்புதானே. அந்த வலியின் வெளிப்பாடுதான் அவர்களின் விமர்சனங்களாய் வெளிவருகின்றன என்பதனை நாம் அறிவோம். நாங்கள் மனநோயாளிகளின் கருத்தை எப்போதும் பெரிதாய் எடுத்துக் கொள்வதில்லை.

உதயன் என்பது சூரியனுக்கு உள்ள மற்றொரு பெயர். சூரியன் ஒளியின் வடிவானவன். உலகத்திற்கு ஒளியைத் தருபவன். உதயன் என்று பெயர் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. இந்த உண்மைகளையும் அதன் நிர்வாகத்தார் தெரிந்து கொள்வது நல்லது. வரவர எங்கள் உதயனுக்கு ஒளியைவிட இருள்தான் அதிகம் பிடிக்கிறது போல்த் தெரிகிறது. எவரெவர் எதையெதை விரும்புகிறார்களோ அவர்கள் அதனதன் வடிவாகவே ஆவார்கள் என்பது உயர்ந்தோர் சொல்லும் முடிவு. இப்படியே வஞ்சனை இருள்களுக்கு இடங்கொடுத்துக் கொண்டு போனால், உதயனும் ஒளி இழந்து இருளாகிவிடப் போகிறது.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ 'திருத்தலாம் ஆகிலன்றோ திருத்தலாம்'; எண்டு கம்பன் சும்மாவோ சொன்னவன் பாருங்கோ?**

**5. உரலார் கேள்வி:-** உங்களது பதில்களில் ஜாதிகளைக் குறிப்பிட்டு எழுதுவதாய்ச் சிலர் குறை சொல்கிறார்கள். அதுபற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** எனது காதிற்கும் அப்படி ஒரு செய்தி வந்தது. இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டது நல்லதாய்ப் போயிற்று. ஒன்றை நான் தெளிவுபடச் சொல்ல விரும்புகிறேன். விரும்பியோ விரும்பாமலோ ஜாதிப் பிரிவுகள் கொண்ட ஒரு சமுதாயத்திற்குள் நாம் பிறந்துவிட்டோம். தொழிலை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பத்தில் ஜாதிகள் பிரிக்கப்பட்டன. ஜாதிகளில் எந்த ஜாதியும் உயர்ந்ததும் இல்லை. எந்த ஜாதியும் தாழ்ந்ததும் இல்லை என்பதே எனது கருத்து. இதனை ஊருக்கு உபதேசமாய் மட்டும் நான் சொல்லவில்லை. எனது தனி வாழ்விலும் இக்கொள்கையைக் கடைப்பிடித்து வரும் துணிவினால்த்தான் இதைச் சொல்கிறேன். பொய், களவு, வஞ்சனை போன்ற இழிந்த இயல்புகளைக் கொண்டோரே தாழ்ந்த ஜாதியினராம். மற்ற அனைவரும் உயர்ந்த ஜாதியினரே. 'நீதி வழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என நம் ஔவைப்பாட்டியும் இச்செய்தியை உறுதிப்படுத்துகிறார்.

உயர் ஜாதியினர் எனச் சொல்லிக் கொள்வோர் செய்த கொடுமைகளுள் மிகப்பெரிய கொடுமை எதுவென்றால், மற்றைய ஜாதியினரை, தாம் தாழ்ந்த ஜாதியினர் என, நினைக்கும்படியாய் நம்பவைத்தது தான். இதற்காக அவர்கள் செய்த உத்திகள் பல. ஜாதிப்பெயர்களைச் சொல்லும்போது பிராமணன், வெள்ளாளன் எனும் பெயர்களை உரத்துச் சொல்லி நளவன், பள்ளன், பறையன் எனும் பெயர்களை வேண்டுமென்றே குரல் தாழ்த்திச் சொல்லி இது ஏதோ ஒரு கெட்டவார்த்தை என்பது போல, அந்தந்த ஜாதியினரை அவர்கள் நம்ப வைத்திருக்கிறார்கள். மனிதர்களுக்குத்தான் ஜாதி. நாய்களுக்கு எங்கே ஜாதி வந்தது? குறிப்பிட்ட ஜாதியினரைத் தாழ்த்துவதற்காக வேண்டுமென்றே பறைநாய் என்று பெயரிட்டு அழைத்த இவர்களது வக்கிரம் மிகக் கொடுமையானது.

இவர்களது இந்தக் கொடுமையால் ஒரு சிலர் தமது ஜாதிப் பெயரைச் சொல்லவே வெட்கப்படுகிறார்கள். பிராமணன் தன்னைப் பிராமணன் என்று பகிரங்கமாய்ச் சொல்வது போல, வெள்ளாளன் தன் ஜாதியை வெள்ளாளன் என்று பகிரங்கமாகச் சொல்வது போல, நான் கரையான், நான் பள்ளன், நான் நளவன், நான் அம்பட்டன், நான் வண்ணான் என ஒவ்வொரு ஜாதியினரும் தலை நிமிர்ந்து தமது ஜாதிப் பெயரைச் சொல்லவேண்டும். அப்போதுதான் மேல் ஜாதியினர் எனத் தம்மைத்தாம் சொல்வோரது வஞ்சனைத் திட்டம் பொடிப்பொடியாகும். ஒழுக்கம்தான் உயர்வை நிர்ணயிக்கும். ஒழுக்கம் உடையவர் எந்த ஜாதியில் பிறந்தாலும் உயர்ந்தோரேயாம். ஒழுக்கம் அற்றவர் எந்த ஜாதியில் பிறந்தாலும் தாழ்ந்தவரேயாம். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டால் என் எழுத்தின் காரணம் புரியும்.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ எல்லாம் சரிதானுங்கோ. வாரிதியாற்ற இந்த நேர்மையான பதிலை இன்னும் எத்தனை பேர் பிழையாக்கப் போறாங்களோ. ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.**

(08ஆம் பக்கம் பார்க்க)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# பல கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தவர் கைது!

## கல்முனையில் சம்பவம்

அம்பாறை, பெப். 25

பல கடவுச்சீட்டுக்களை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான அரச பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமாக நபர் ஒருவர் பல கடவுச்சீட்டுக்களை நபர்களிடம் பெற்று வருகிறார் என பொலிஸ் விசேட பிரிவு பொறுப்பதிகாரிக்கு தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

வியாழக்கிழமை இதற்கமைய சம்பவ இடத்துக்கு கல்முனை தலைமையக பொலிஸார் வருகை தந்து சுற்றி வளைத்து தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதி பகுதியை சேர்ந்த 51 வயது மதிக்கத்தக்க மைக்கல் மணிமேகலன் என்பவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு எனக் கூறி சிலரிடம் பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டுக்களுடன் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் வங்கி கணக்கின் ஊடாக பலரிடம் பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகநபர் வசம் இருந்த கடவுச்சீட்டுக்கள் மீட்கப்பட்டு உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

இவ்வாறு வரவழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நற்பிட்டிமுனை பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் தமது கடவுச்சீட்டுக்களை சந்தேக நபரிடம் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பிற்காக வழங்கியதாகவும் அதற்காக சந்தேக நபரின் வங்கி கணக்கிற்கு பெருந்தொகையான பணத்தை வைப்பிலிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி. எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையின் அடிப்படையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் பொலிஸ் குழுவினர் இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வாக்குமூலங்களை பெற்றுள்ளதுடன் கைதான சந்தேக நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரா அல்லது இடை தரகரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 'விபுலானந்த சங்கீதம்' இசை இறுவட்டு வெளியீடு



(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் 'விபுலானந்த சங்கீதம்' இசை இறுவட்டு வியாழக்கிழமை கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கில் இடம்பெற்றது.

அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் நீலமாதவானந்தாஜீ மகராஜ் ஆசியுரை வழங்க, கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.செல்வராசா முன்னிலை வகிக்க, கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் சின்னையா மௌனகுரு, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் மற்றும் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் மற்றும் காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றத் தலைவர் வெற்றிவேல் ஜெயநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இவ்இசை இறுவட்டிற்கான மதிப்பீட்டினை சக்தி பண்பலை அலைவரிசைப் பிரதானி சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை கஜமுகன் வழங்கினார்.

# கல்முனை நகரசபை நிதிக் கையாடல்: சந்தேகநபர்கள் இருவரும் தலைமறைவு

கல்முனை மாநகர சபையில் நிதிக் கையாடல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இரு பணியாளர்களும் தலைமறைவாகி இருக்கின்றனர் என்று முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார். தொடக்க விசாரணைகளின் பின்னர் இந்த இரு பணியாளர்களும் இடைநிறுத்தப்பட்ட பின்னணியில் அவர்கள் தலைமறைவாகி இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த நித்திகையாடல் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் எம்மால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அம்பாறை சிறப்புக் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் இந்த விடயம் பொறுப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் இருவரும் தலைமறைவாகியிருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களைக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை நான் வலியுறுத்திக் கேட்டுள்ளேன்.

குறித்த விடயம் நிர்வாக மற்றும் பொலிஸ் புலனாய்வு விசாரணைகளின் கீழ் இருப்பதனால் மேலதிக தகவல்களை வெளிப்படுத்துவது உசிதமல்ல எனக் கருதுகின்றேன்" என்றார் முதல்வர்.

இந்த விடயத்தில் எவர் மீதும் கருணை காட்டப்படமாட்டாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நிதி மோசடியுடன் எவர் சம்மந்தப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு உரிய தண்டனைகளை பெற்றுக்கொடுப்பதில் நான் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறேன் – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உரலார் கேள்வியும் ....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**6. உரலார் கேள்வி:-**'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சியில் தற்போதைய யாழ். மேயர் ஆர்னோல்ட் அவர்களைப் பேட்டி கண்டவர்கள் அவரை உருட்டி எடுத்த அழகை ரசித்தீர்களா?

**உலக்கையார் பதில்:-**ஆஸ்திரேலியா மெல்போர்ண் நகரில் நண்பர் ஒருவரின் காரில் சென்று கொண்டிருந்தபோது விட்டு விட்டு அந்தப் பேட்டியைக் கேட்க முடிந்தது. அதனை ரசிக்காமல் எப்படி இருக்க முடியும். மேயர் பதவிப் போட்டியில் முதலில் போட்டியிடுவதாய் அறிவித்துப் பின்னர் விலகிக் கொண்டவர் பற்றிய கேள்விக்கு, தனக்காக அப்போட்டியிலிருந்து விலகிய அவரைத் திருப்தி செய்வதாய் நினைந்து, அவரின் தகுதிகளை அளவுக்கதிகமாக ஆர்னோல்ட் அடுக்கிக் கொண்டேபோக, அந்த 'குசும்புப்' பேட்டியாளர், 'அப்படியென்றால் அப்பதவியை அவருக்கு நீங்கள் அல்லவா விட்டுக்கொடுத்திருக்க வேண்டும்?' என்று எதிர்பாராமல் கொடுத்த சம்மட்டி அடியால், ஆர்னோல்ட் வெலவெலத்துப் போனதை யார்தான் ரசிக்காமல் இருந்திருப்பார்கள்.

அதுபோலவே சுமந்திரன் மீது அவர் காட்டிய முன்னுக்குப் பின் முரணான பகை, நட்பு ஆகியவற்றிற்கான காரணம் கேட்கப்பட்டபோதும் உண்மையை மறைத்துச் சமாளிக்க அவர் பட்டபாடு பெரும்பாடாகிவிட்டது. இரண்டு பூனைகளிடம் அகப்பட்ட சுண்டெலியாய் ஆகித் தத்தளித்தார் ஆர்னோல்ட்.

இந்த நிகழ்ச்சியை நடத்தும் பேட்டியாளர்கள் இருவரும், ஆடாமால் அசையாமல் இருந்து கொண்டு, மலைவிழுங்கி மாப்பாணர்களாய்ச் செய்யும் விளையாட்டுக்களைத் திரும்பத் திரும்பப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஏனோ தெரியவில்லை அந்தப் 'பாஸ்வேர்ட்' பிரச்சினையை மட்டும் அவர்கள் தொடாமல் விட்டுவிட்டார்கள். எவர் தந்த அழுத்தமோ யாரறிவார்?

**சல்லடையாரின் சலிப்பு * 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பது ஏது?' என்பது இதைத் தானுங்கோ.**




காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சியாளரின் ஊழலுக்கு துணைநின்றால் அரச ஊழியர்களுக்கு தண்டனை நிச்சயம்

## தனது ஆட்சியில் நடக்கும் என சஜித் எச்சரிக்கை



அரசின் ஊழலுக்கு துணைபோகும் அரச ஊழியர்களுக்கு தனது ஆட்சியில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாட்டில் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். வீடு, தொழில், விவசாயம் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்கள் மக்களுக்குஏற்பட்டுள்ளன. இதனைப்பெற்றுகொடுக்கும் பணியை நாங்கள் முன்னெடுப்போம்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கம் பெற்று மூன்று ஆண்டுகள். இந்தக் கட்சிக்கு 3 வயது. ஆனாலும், நாங்கள் பல்வேறு திட்டங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம். மாணவர்களின் நலன் கருதி 70 பாடசாலைகளுக்கு பஸ்களை வழங்கியுள்ளோம். வைத்தியசாலைகளுக்குவைத்திய உபகரணங்களையும், சிமாட் வகுப்பறைகளை மாணவர்களிற்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்கள் 30 வருட யுத்தத்தால் பல்வேறு இழப்புக்களை சந்தித்துள்ளனர். இனப்பிரச்சினையாலும், மத பிரச்சினையாலும் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். இதற்கு மேல் நாட்டைக் கொள்ளையடித்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கும் மக்கள் முகம் கொடுக்கின்றனர்.

இன்றைய அரசு மக்களின் மனதை அறிந்து செயற்படாத அரசாக உள்ளது. இது மக்களுக்கான அரசு அல்ல. அதனால்தான் பொருள்களின் விலையை அதிகரித்தும், எரிவாயுவின் விலையையும் அதிகரித்துள்ளது. மேலாக வரியையும் அதிகரித்துள்ளது. இந்த ஆட்சி மக்களை துன்பத்துக்குள்ளாக்கிய ஆட்சி.

அரசின் ஊழலுக்குத் துணைபோகும் அரச ஊழியர்களுக்கு எனது ஆட்சியில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். இவ்வாறான நிலையில் கரைச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச சபைகளின் வெற்றிக்காக இன்று நாங்கள் கூடியுள்ளோம்.

என்னால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்ட பணிகள் கடந்த ஆட்சியாளர்களால் தடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சியமைத்த பின்னர் அதனை நான் தொடருவேன். அதற்காக எமக்கு ஆதரவைத் தாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக மாணவர்கள் திருமலையில் ஆர்ப்பாட்டம்!



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் நிலவி வருகின்ற கல்வி மற்றும் நலன்புரி உட்கட்டமைப்பு தொடர்பான குறைபாடுகளை உடனடியாக தீர்க்கக்கோரி வெள்ளிக்கிழமை திருகோணமலையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவ சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் அபயபுர சுற்று வட்டத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வழாகத்தில் காணப்படும் விடுதிகள், விளையாட்டு மைதானம் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான வசதிகளை உடனடியாகச் செய்து தர வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

பெருந்திரளான மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் காரணமாக வீதி ஊடான போக்குவரத்து பல மணி நேரம் தடைபட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்க 56 பில்லியன் ரூபா ஒதுக்கீடு!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்



இந்த வருடம் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அரசாங்கம் 56 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக, விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் இந்தி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க அரசாங்கம் இந்த நிதியை ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.




## இனியும் மக்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏழு தசாப்த கால எதிர்க்கட்சியின் சம்பிரதாய வகிபாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி முற்றிலும் மாற்றியமைத்துள்ளது.

குறுகிய காலப்பகுதியில் நாட்டுக்குப் பெறுமதி சேர்க்கும் பல சிறந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நாட்டில் ராஜபக்ஷ ஆட்சி மொத்தம் இருநூற்று இருபது இலட்சம் மக்களையும் பெரும் பேரழிவில் ஆழ்த்தியுள்ளது. இதனால் முழு நாடும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாட்டை மீட்டெடுக்கக்கூடிய ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியே. மக்கள் அனைவரும் இன, மத பேதங்களை மறந்து ஓரணியாக எமது கட்சியை ஆதரிக்க வேண்டும் - என்றார்.

## ரணிலின் கருத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விடுத்த அறிவிப்பு தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

காசு இல்லை எனக் கூறி தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது. ஜனாதிபதியின் கருத்து தவறு. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையிலேயே நாம் இருக்கின்றோம் - என்றும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## தேர்தலை நடத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

புத்தளம் நாகவில்லு ஜும் ஆ பள்ளி வாசலுக்கு முன்பாக தொழுகையின் பின்னர் கூடிய பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப்பாட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் போராளிகள் மற்றும் வேட்பாளர்கள் மற்றும் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது என்று அதில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

சாட்டுப் போக்குகள் சொல்லி தேர்தலை ஒத்தி வைக்காமல் அதனை நடத்துமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் வலி



யுறுத்தினர். "எமக்கு நீதி வேண்டும்" என்று அவர்கள் வலியுறுத்தினர். அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பியதுடன் பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தலை நடத்த அரசுக்கு நிதி உதவி செய்யும் விதமாக ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் அங்கு நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டார். தேர்தல் என எழுதப்பட்ட ஒரு உண்டியலை எல்லோரிடமும் நீண்டி அவர் பணம் சேகரித்தார். சேரும் பணம் அனைத்தையும் திறைசேரிக்கு அனுப்பு வைப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

## "எமக்கும் காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் யாழ். மாவட்ட செயலர்



ஆகியோரிடம் கையளித்தனர்.

காணி அற்றோர் மக்கள் இயக்கம் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

நீண்ட காலமாக தாம் வாடகை வீடுகளில் வசித்து வருவதனால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் பெருந்தொகையான வாடகையைச் செலுத்த முடியாது தாம் தவித்து வருகின்றனர் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை காணியற்ற தமக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். தமது கோரிக்கை வலியுறுத்தி யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக அவர்கள் சில மணி நேரம் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று வட மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு சென்று ஆளுநரின் செயலாளரிடம் மனுவைக் கையளித்தனர். தொடர்ந்து மாவட்டச் செயலரிடமும் மனுவைக் கையளித்தனர்.

யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணிகள் அற்றிருக்கும் 300 முஸ்லிம் குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளியில் காணிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று செய்தி வெளியானதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் வாழும் காணியற்ற ஏனையோரும் தமக்கும் காணிகள் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களில் 300 குடும்பங்களுக்கே பச்சிலைப்பள்ளியில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வசம் உள்ள 45 ஏக்கர் காணியில் தலா 2 பரப்பு வீதம் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அதானியின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான செய்திகள் வெளியானதை அடுத்து இந்தத் திட்டத்திற்கு மக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பில் வெள்ளிக்கிழமை மன்னாரில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரஜைகள் குழுவினர் இந்தத் திட்டங்களுக்கான தமது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் மன்னார் தீவில் உள்ள மக்களிடம் அரசு கருத்துக் கேட்கவில்லை என்றும் ஆட்சியாளர்கள் சர்வாதிகாரமாக இந்தத் திட்டத்தை முன்னெடுக்கிறார்கள் என்றும் பிரஜைகள் குழுவினர் குற்றஞ்சாட்டினர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

மன்னாரில் ஏற்கனவே ஒரு காற்றாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் இங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனாலும் மக்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது அதைவிடப் பெரிய திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்பது எமக்குப் பேரிடியாக இருக்கின்றது.

மன்னார் தீவின் தெற்கே ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள காற்றாலையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் அனைத்தையும் ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர், இப்போது வடக்குப் பகுதிக் கடற்கரையில் அதைப் பெரிய திட்டத்தைச் செயற்படுத்த முனைகிறார்கள்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட காற்றாலையால் தலைமன்னார், பேசாலை, நடுக்குடா, பெரியகரிசல், புதுக்குடியிருப்பு, சின்னக்கரிசல், தோட்டவெளி, தாழ்வுபாடு, கீரி ஆகிய கரையோரங்களையொட்டி வாழும் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. காற்றாலைகளை ஒட்டியுள்ள கடலில் மீன்பாடு வெகுவாகக் குறைந்துள்ளது.

இந்தக் காற்றாலைகளால் மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருகிறார்கள். மீன்பிடித் தொழிலைக் கைவிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். குறிப்பாக கரைவலை மற்றும் கரையோர மீன்பிடிகள் பாதிக்கப்பட்டுவிட்டன.

இதுதொடர்பில் பல போராட்டங்களை நடத்தி ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்க்க நாம் முயற்சித்துவிட்டோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை. இப்போது வடக்குப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் நடவடிக்கையில் ஆட்சியாளர்கள் இறங்கியுள்ளனர்.

காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்பு கரையோர மக்களுக்கு மட்டுமல்ல. மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களில் மூன்றிலிரண்டு பகுதியினர் மன்னார் தீவிற்குள்தான் வாழ்ந்து வருகின்றனர். காற்றாலைகளுக்காக அவர்களின் காணிகள் பெரும் விலை கொடுத்து வாங்கப்படுகின்றன. கடல் சார்ந்தும் கரையோரம் சார்ந்த தெங்கு, பனைச் செய்கைகள் ஊடாகவும் தமது வாழ்வாதாரத்தைப் பெற்று வந்த இந்த மக்கள் காணிகளை விற்ற பின்னர் வாழ்வாதாரம் இன்றி மன்னாரை விட்டு வெளியேறுகின்றனர். அல்லது கொடிய வறுமைக்குள் சிக்கிக்கொள்கின்றனர். இதனால் நகரத்தில் உள்ள வியாபார நிலையங்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இவற்றைக் கருத்தில்கொண்டு இந்த காற்றாலைத் திட்டத்தை ஆட்சியாளர்கள் வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். நாங்கள் அபிவிருத்திக்கோ காற்றாலைகளுக்கோ எதிரானவர்கள் அல்லர். எமது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் அந்தத் திட்டங்களை முன்னெடுக்காதீர்கள் என்றுதான் கோருகின்றோம் - என்றனர்.

## மின் கட்டணத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார ஊழியர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் என்பன அறிவித்துள்ளன.

பெரும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றோம் என்று வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் தொழிற்சங்களின் சம்மேளத் தலைவர் மாலக்க விக்கிரமசிங்கே.

மின்சாரக் கட்டணங்களை இலங்கை மின்சாரசபை மீள்பரிசீலனை செய்யவேண்டும். பாவனையாளர்களுக்குச் நல்லதாகவும் நடுநிலையானதாகவும் கட்டணங்களை விதிக்கக்கூடிய முறைக்கு அது மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

2021 முதல் நிறுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் ஆண்டு ஊக்கத்தொகை மற்றும் மருத்துவக் கொடுப்பனவுகளை வழங்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டத்தை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

"12 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் பணியாளர்கள் அன்றைய தினம் (திங்கட்கிழமை) சுகவீன விடுப்புக் கொடுத்துவிட்டு பகல் 10.30 மணியளவில் இடம்பெறும் தொழிற்சங்கப் போராட்டத்தில் கலந்துகொள்வார்கள்" என்று மாலக்க தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்திற்கு ஆட்சியாளர்கள் உரிய பதிலைத் தரவில்லை என்றால் போராட்டம் நாடு முழுவதும் விரிவடையும் என்றும் அவர் தெரிவித்தார்

## பொலிஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய அமர்வு இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வது என்று தீர்மானித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்புக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் மேல் மாகாணத்தில் 2022 ஜூலை மாதம் 9 ஆம் திகதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது. பொலிஸ் மா அதிபரின் முடிவை சவாலுக்குட்படுத்தி 2022 ஓகஸ்ட் மாதம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களாக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாவலர். லட்சுமணன் சஞ்சீவ், மனித உரிமைகள் சட்டத்தரணி ஆதம் லெப்பை ஆசாத் ஆகியோர் சார்பாக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பொலிஸ்மா அதிபர் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்ததன் மூலம் அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்படும் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகிய மக்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் முறையிட்டுள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 12 வெள்ளிக்கிழமை 24.02.2023 கதிர் 359

## மூவரைத் தாக்கியது யானை குடும்பஸ்தர் பரிதாபச் சாவு

### சம்பாந்துறையில் சம்பவம்

விவசாய நடவடிக்கைக்காகச் சென்ற மூவரை யானைகள் தாக்கியதில் ஒருவர் பலியாகியதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை – பெரிய கொக்கனாரை வட்டை பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது யானை தாக்கியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே 2

# தேர்தல் ஒத்திவைப்பு




## ஆணைக்குழு இன்று அறிவிப்பு புதிய திகதி மார்ச் 3இல் முடிவு

ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தலுக்கான புதிய திகதி எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2

## தேர்தல் இல்லையேல் வீதியில் இறங்குவோம்



### டலஸ் அணியும் எச்சரிக்கை

தேர்தலை நடத்தாவிடின் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம்.

இவ்வாறு டலஸ் அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும். 2

## ரணில் ஒரு சர்வாதிகாரி

### அநுர குமார காட்டம்





ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி அல்லர், அவர் ஒரு சர்வாதிகாரி. அதை அவர் தனது நடவடிக்கைகள் மூலம் நாள்தோறும் வெளிப்படுத்தி வருகின்றார்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் கூட்டங்களில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களின் அலையைக் கண்டு ரணில் – ராஜபக்ச கூட்டணியினரும், சஜித் பிரேமதாஸ அணியினரும் கதிகலங்கி நிற்கின்றனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பையும், சட்டங்களையும் மீறி தேர்தலை ஒத்திவைக்க முயல்கின்றார்.

தேர்தலை ஒத்திவைக்குமாறு 2

## பரப்புரைக் கூட்டத்தை ஒத்திவைத்தது மொட்டு

அநுராதபுரத்தில் இன்று நடைபெறவிருந்த ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதான தேர்தல்பிரசாரக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 2




## கடலட்டை பண்ணை வழக்கில் அதிகாரிகளுக்கு அழைப்பாணை

கிளிநொச்சி மாவட்டம் கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணைகள் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப்படுவது பாரம்பரிய மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கிறது என்று தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளான அரச அதிகாரிகள் அனைவரையும் நீதிமன்றத்தில் தோன்றி விளக்கமளிக்குமாறு அழைப்பாணை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார்.

கிராஞ்சி இலவன்குடா கிராமத்தினை வாழ்விடமாகக் கொண்டு பாரம்பரிய மீன்பிடித்துறையில் காலம் காலமாக ஈடுபட்டு வரும் மக்கள் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலவன்குடாவில் வாழும் மூன்று மீனவர்கள் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலர், தேசிய நீர்; உயிரின வளாப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கரையோர நீர்வாழ் உயிரின விரிவாக்கல் பிரிவின் கிளிநொச்சி பிரதேசத்தின் உதவிப் பணிப்பாளர், கடற்தொழில் நீரியல்வள திணைக்களத்தின் கிளிநொச்சி பிரதேச உதவிப் பணிப்பாளர், கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி பிரதேசத்திற்கான பிரதேச பொறியியலாளர், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ் வழக்கில் சட்டத்திற்கு புறம்பாகவும் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டும் கடல் அட்டைப்பண்ணையாளர்களுக்கு சார்பாகவும் நடவடிக்கைகள் எடுத்ததன் மூலமும் அப்பிரதேச மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் கருத்திற்கொள்ளாது தேசிய உயிரின அபிவிருத்தி அதிகாரசபை சட்டம், கடற்தொழில் நீரியல்வளச்சட்டம், கரையோரம் பேணல் சட்டம், அரசகாணி கட்டளைச்சட்டம், தேசிய கடல்வளங்கள் ஆராட்சி அதிகாரசபைச்சட்டம் மற்றும் கடலோர அபிவிருத்திச்சட்டம் ஆகிய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக அரச அதிகாரிகள் செயற்பட்டுவருகின்றார்கள் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மனிதஉரிமை ஆணைக்குழுவின் முன்னால் நடந்த விசாரணையில் மேற்குறித்த உத்தியோகத்தர்கள் கிராஞ்சி பிரதேசத்தில் சட்டரீதியற்ற விதத்தில் நிறுவப்பட்டுள்ள கடல் அட்டைப்பண்ணைகளை அகற்றுவதற்கு வாக்குறுதியளித்தபோதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை என்று இவ் மனுவில் சுட்டுக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி சட்டரீதியற்ற முறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனே நிறுத்துமாறும் விதிமுறைகளுக்கு அப்பால் அளிக்கப்பட்ட உரிமங்களை நிறுத்துமாறும் கடல் அட்டைப் பண்ணைகள் அமைப்பதனை உடனடியாக நிறுத்துமாறும் உறுதிகேள் எழுத்தாணை கேட்டு இந்த வழக்குகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவினை நீதிமன்றத்தில் ஆதரித்து மேற்கொள்ளப்பட்ட சமர்பணங்களை பரிசீலணை செய்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், பிரதிவாதிகள் மன்றில் தோன்றி விளக்கமளிப்பதற்கும் இவ் மனுவில் கோரப்பட்ட நிவாரணங்களை ஏன் வழங்க கூடாது என்பதற்கான விளக்கத்தினை அளிப்பதற்மாக எதிராளிகளை மார்ச் மாதம் 22 ஆம் திகதி மன்றில் சமூகமளிக்குமாறு கட்டளைவிடுத்துள்ளனர்.

## பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட அரசியல் கைதி விடுதலை!



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான செல்லையா சதீஸ்குமார் விடுதலை செய்யப்பட்டார்.

சுயாதீன ஊடகவியலாளரும் எழுத்தாளருமான சதீஸ்குமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

சதீஸ்குமார் உட்பட மூன்று தமிழ் அரசியல் கைதிகளுக்குக் பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில், உயர்நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன் முறையீட்டு மனு அவரால் மீளப்பெறப்பட்டதை அடுத்து நேற்று அவர் விடுதலையானார்.

விவேகானந்தர் நகர் கிழக்கு, கிளிநொச்சியை வாழ்விடமாகக் கொண்ட சதீஸ்குமார் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 2

## கனேடிய குடிமகனை வாளால்வெட்டி பொருந் தொகைப் பணம் கொள்ளை

### அனலைதீவில் அதிகாலையில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

அனலைதீவில் தங்கியிருந்த கனேடிய குடிமகன் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு பெருமளவு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கனடாவில் இருந்து இரண்டு மாதங்களிற்கு முன்னர் அனலைதீவிற்கு வந்து அங்கிருக்கும் தமது பூர்வீக வீட்டை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது ஒரு குடும்பம். அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குள் நள்ளிரவு 12 மணியளவில் கதவை உடைத்து உட்புகுந்தது நால்வர் கொண்ட கும்பல். தாம் கொண்டு வந்திருந்த வாளால் குடும்பத் தலைவரை வெட்டிக் காயப்படுத்தியதுடன் குடும்பத்தவர்களை மிரட்டியது அந்தக் கும்பல்.

பின்னர் வீட்டிலிருந்த 2 ஆயிரம் கனேடிய டொலர் மற்றும் ஆயிரம் அமெரிக்க டொலர், 2 கனேடிய கடவுச் சீட்டுக்கள், வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்கள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது.

முகங்களை கறுப்புத் துணியால் மூடியவாறு 4 நான்கு பேரே கதவை உடைத்துவீட்டிற்குள்நுழைந்து இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். கொள்ளை நடந்தபோது கனடாவில் இருந்துவந்திருந்தவரும் அவரது மனைவியும் அயலவர்கள் இருவரும் அங்கிருந்துள்ளனர்.

கனேடிய தம்பதியர் நாடு திரும்பத் தயாராகப் பொதி செய்து வைத்திருந்த பொருட்களை எல்லாம் கிண்ணிக்கிளறித் தேடித் தேடிய அதிலிருந்த பொறுமதியான பொருட்கள் எல்லாவற்றையும் அவர்கள் கொண்டு சென்றுள்ளனர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தவர் அதிகாலையில் படகு மூலம் ஊர்காவற்றுறைக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து 2 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொண்டுசெல்லப்பட்டு சேர்க்கப்பட்டார்.

இந்தக் கொள்ளை தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நிதி அமைச்சுக்கு எதிராக வழக்கு

### ஜேவிபி முடிவு

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறு நிதி அமைச்சிற்கு உத்தரவிட வலியுறுத்தி உயிர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரித்ததாவது:

தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவதும், அதனை விடுவிப்பதும் நிதி அமைச்சு மற்றும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். எனினும் நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய தேர்தலை நடத்துவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம். அதேபோன்று நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலும் எதிர்வரும் தினங்களில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம்.

அரச அதிகாரிகள் தேர்தலை நடத்துவதில் 2

## பொது மன்னிப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்புலன்ஸ் சாரதியாக கடமையாற்றியிருந்தார்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பணி நிமிர்த்தம் கொழும்பு சென்ற இவரை வவுனியாவில் வைத்து பொலிஸார் கைது செய்திருந்தனர்.

புலிகளுக்கு உதவினார் என்று அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இது தொடர்பான வழக்கில் கடந்த 2011ஆம் ஆண்டு அவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

## தேர்தல் இல்லை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலை ஒத்திவைக்கச் சாக்குப்போக்குக் காரணங்களைக் கூறுவதை அரசு நிறுத்த வேண்டும்.

நாட்டின்உண்மைநிலைமைமக்களுக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ – அவர் தலைமையிலான அரசோ மக்களுக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை – என்றார் அவர்.

## ரணில் ஒரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோரிக்கை விடுத்த எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் – என்றார்.

முன்னதாக, வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் பதாகைகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு போராடும் எதிர்க் கட்சியினரில் பலர் தனக்கு அழைப்பெடுத்து தேர்தலைப் பிற்போடுங்கள் என்று கேட்டவர்கள்தான் என்று தெரிவித்திருந்தார்.

## தேர்தல் ஒத்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் இல்லாத விடயங்கள் காரணமாக மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவினர் இன்று முற்பகல் கூடி ஆராய்ந்தனர். இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா, அதன் உறுப்பினர்களான எஸ்.பி. திவரத்ன, எம். எம். முகமது மற்றும் கே. பி. பி. பத்திரன ஆகியோர் பங்கேற்றனர்.

## பரப்புரைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

எமது கட்சியின் பிரதான தேர்தல் பிரசசாரக் கூட்டம் அநுராதபுரத்தில் இருந்தே ஆரம்பமாகும். அந்தவகையில் இம்முறையும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்று நடைபெறவிருந்த கூட்டம் தற்போது பிற்போடப்பட்டுள்ளது.

தேர்தல்நடந்தாலும், நடக்காவிட்டாலும் மார்ச் 10 மற்றும் 20 ஆம் திகதிக்குள் மேற்படி கூட்டத்தை அநுராதபுரத்தில் நிச்சயம் நடத்துவோம் என்றார்.

## மூவரைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான மட்டக்களப்பு, தரவை 1 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பஸ்தரே (வயது 55) சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மேலும் இந்தத் தாக்குதலில் காயமடைந்த 29 வயதுடைய இளைஞர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் 52 வயதுடைய மலையடி, கிராமம் 2 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடையாக செயற்படுகின்றமை தொடர்பிலும் நீதிமன்றத்தை நாட முடிவு செய்துள்ளோம்..

மக்களின் வாக்குரிமையை பாதுகாத்து இறையான்மையை உறுதிப்படுத்துவதற்கு நாம் முழு முயற்சி எடுப்போம். இதற்காக உச்சபட்சசட்ட நடவடிக்கையையும் எடுப்போம். நிதி அமைச்சினை தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் வழக்கு தாக்கல் செய்வோம் –என்றார்.

# நிதி மோசடிக் குற்றச்சாட்டில் 2 பணியாளர்கள் இடைநிறுத்தம்

## கல்முனை மாநகர சபையில் நடவடிக்கை

(எம்.எம்.அஸ்லம்)




கல்முனை மாநகர சபையில் நிதிக்கையாடல் குற்றச்சாட்டுக்களின் கீழ் இரு பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தொடக்கவிசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சபையில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனுடன் சம்மந்தப்பட்டவர்கள் எவராயினும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

"கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றி வந்த 02 ஊழியர்கள் நிதிக்கையாடலில் ஈடுபட்ட விடயம் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. நான் ஆணையாளருக்கு வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் அவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றார் முதல்வர்.

தொடக்க விசாரணைகளில் இரு பணியாளர்களும் மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்திருப்பதால் அவர்கள் இருவரும் உடனடியாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இருவரும் வரியிருப்பாளர்களுடன் மேற்கொண்ட கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகளிலும் மோசடி, முறைகேடுகள் செய்திருக்கின்றார்களா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்மந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன என்றும் முதல்வர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த நித்திகையாடல் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் எம்மால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அத்துடன் அம்பாறை விடே குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இவ்விடயம் பொறுப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை குறித்த இருவரும் தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், எவ்வாறாயினும் இவர்களைக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை நான் வலியுறுத்திக் கேட்டுள்ளேன்.

குறித்த விடயம் நிர்வாக மற்றும் பொலிஸ் புலனாய்வு விசாரணைகளின் கீழ் இருப்பதனால் மேலதிக தகவல்களை வெளிப்படுத்துவது உசிதமல்ல எனக் கருதுகின்றேன்.

இவ்விடயத்தில் எவர் மீதும் கருணை காட்டப்பட மாட்டாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நிதி மோசடியுடன் எவர் சம்மந்தப்பட்டிருந்தாலும் உரிய தண்டனைகளை பெற்றுக்கொடுப்பதில் நான் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறேன் - என்று கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்துள்ளார்.



# ஜனாதிபதி நாடாளுமன்றத்தை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சி!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



சர்வதேச நாணய நிதியத்தின் இறுதித் தீர்வு நாடாளுமன்றத்திடம் என குறிப்பிட்டு ஜனாதிபதி நாடாளுமன்றத்தை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கிறார்.

நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடு கள் எவையும் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பை நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

விரிவான பேச்சுகளை முன்னெடுக்காமல் நிபந்தனைகளுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழு சட்டத்தின் இரு கட்டளைச்சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளும் பேச்சுகளை நிறைவு செய்து ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்போம். நாடாளுமன்றமே இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்காவிட்டால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொள்ளும் பேச்சு தொடர்பான விவரங்கள் ஏவையும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை, எந்த நிபந்தனைகளும் எமக்குத் தெரியாது, இவ்வாறான பின்னணியில் நாணய நிதியம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாடாளுமன்றத்தால் எவ்வாறு எடுக்க முடியும். ஜனாதிபதியின் கருத்து நாடாளுமன்றத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் தன்மையில் காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தொடர்பில் அரச வர்த்தக சங்கத்துடன் பேச்சுகளை மேற்கொண்டதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தவிடயம்தொடர்பில்வர்த்தக சங்கத் தலைவருடன் வினவிய போது ஜனாதிபதியின் கருத்தை அவர் மறுத்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்கான கொள்கைத் திட்டத்தை எவரும் முன்வைக்கவில்லை என ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை கவலைக்குரியது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்து வைத்தார். கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பொருளாதார மீட்சி, கடன் மறுசீரமைப்புக்கான 10 குறுகிய கால யோசனைத் திட்டத்தை முன்வைத்தோம்,

பொருளாதார மீட்சிக்காக முன்வைக்கப்பட்ட 10 யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. ஊழல் ஒழிப்பு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதும், அவற்றை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நடைமுறைப்படுத்திய தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தை அரசாங்கம் விரைவாக நாட வேண்டும் என 2020 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்டோம்.

பொருளாதாரம் பாதிக்கப்படவில்லை, தேவையான அளவு வெளிநாட்டுக் கையிருப்பு உள்ளது. ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தைநாடவேண்டியதேவைஇல்லை என ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர்பி.பி.ஜயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் குறிப்பிட்டார்கள்.

நாட்டின் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்து முழு நாடும் தற்போது அதள பாதாளத்துக்குள் சென்றுள்ள போது பி.பி.ஜயசுந்தர, அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் காணாமல் போயுள்ளார்கள்.

2020 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் பணவீக்கம் உயர்வடைந்திருக்காது, நாடும் வங்குரோத்து நிலை அடைந்திருக்காது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு தற்போது சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர மாற்றுத் திட்டம் ஏதும் கிடையாது, நாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. நாணய நிதியத்திடம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள இணக்கப்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் விரிவான பேச்சுகளை முன்னெடுக்காமல் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. – என்றார்.

# வடமாகாண சுகாதார நிர்வாக விடயங்களில் முறைகேடு

## முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் காட்டம்



வடக்கு மாகாண சுகாதார நிர்வாக விடயத்தில் உயர் பொறுப்புக்கான பதவிக்குச் சட்டவிரோதமானதும், முறைகோடானதுமான நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

வடக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராக அண்மையில் திலிப் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாணத்தின் சுகாதார நிர்வாக சேவைகள் ஆணையாளராக வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் இருந்துள்ளார்.

அவரது காலம் முடிவடைந்த பிறகு அவரது இடத்திற்கு அடுத்தாகப் பிரதி ஆணையாளராக வைத்திய கலாநிதி நந்தகுமார் சுகாதார நிர்வாக சேவையாளர் பட்டியலில் முன்னணியிலுள்ளார்.

அவ்வாறான தகுதியும், அனுபவமும் உடைய ஒருவர் இருக்கத்தக்கதாக இந்தப் பட்டியலில் 68 ஆவது இடத்தில் இருக்கும் திலீப் லியனகே எல்லபிட்டிய ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றியவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

மூத்தவர் தரபட்டியலில் முதலாவதாகவும், கேதீஸ்வரனுக்கு அடுத்ததாக இருப்பவர் நந்தகுமார். இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் பதில் ஆணையாளராகக் குறித்த காலங்கள் கடமையாற்றி அனுபவம் வாய்ந்தவர்.

இந்த நியமனத்தைச் செய்யும் பொறுப்பும் கடமையும் மாகாண சபைக்குரிய அதிகாரம் ஆகும். ஒரு மாகாண திணைக்கள ஆணையாளரையோ ஏனைய வைத்தியர்களையோ நியமித்தல், இடம் மாற்றம் செய்தல் என்பன மாகாண சபைக்குரியது.

மாகாண சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி இல்லாத பட்சத்தில் அந்த அதிகாரமும் பொறுப்பும் ஆளுநருக்குரியதாகும். முறைகேடாக ஒருவர் அனுப்பப்படும் போது அவரை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆளுநரின் பொறுப்பும் கடமையும் ஆகும். இவ்வாறு இருக்கையில் முறைகேடான நியமனத்தைச் செய்தவர் ஆளுநரே.

இவங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இலங்கையில் எந்தப் பகுதியிலும் வேலை செய்யலாம். அதேபோல் கல்வி நிர்வாக சேவை எனப் பல சேவைகள் உள்ளன. மாகாணத்துக்கான தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லாதபோது அந்த மாகாணத்தினுடைய மாகாண சபையின் அமைச்சர்கள், முதலமைச்சர் ஆகியோர் இல்லாத பட்சத்தில் ஆளுநர் மத்திய அரசாங்கத்திடம் பதவிக்கு ஆள் தேவையென எனக் கேட்கும்போது அவர்கள் விடுவிக்க முடியும். அவ்வாறு விடுவிக்கும் ஒருவரை ஏற்பதா? இல்லையா? என்பதை மாகாண சபை தீர்மானிக் கும். இன்று மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாண சபை இல்லாத காரணத்தால் அதன் நிர்வாகக் கட்டமைப்பு ஆளுநரின் பொறுப்பாக உள்ளது. மத்திய அரசாங்கம் ஒருவரை அனுப்பினாலும் அவருக்கு ஆளுநரின் நியமன கடிதம் இல்லாமல் அந்தப் பதவியை ஏற்கமுடியாது. இன்றுலியனகே பதவியைஏற்றாரெனில்ஆளுநரின் கடிதத்தைப் பெற்றாரா? இல்லையா? என்ற கேள்வி உள்ளது.

ஆளுநர்நியமனகடிதம்கொடுக்காமல் பொறுப்பேற்று இருக்க முடியாது. அவ்வாறாகக் கடிதம் கொடுக்கப்பட்டிருந்தால் ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

மாகாணத்துக்குரிய திணைக்கள ஆணையாளராக இணையும் ஏனைய முக்கிய அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பு மாகாண சபைக்குரியதாக உள்ளபோதும் இவரது நியமனம் சட்டவிரோதமானது.

13 ஆவதுதிருத்தச்சட்டத்துக்கும் வடக்கு மாகாணத்தில் கொண்டுவரப்பட்ட மருத்துவ சேவைகள் நியதி சட்டத்தில் மாகாண சுகாதார சேவைகள் ஆணையாளரை நியமிக்கும் பொறுப்பு மாகாண சபை க்குரியது எனக் கூறப்பட்டது. இந்த நியமனம் இந்தச் சட்டங்களுக்கு முரணான செயற்பாடாகும்.

ஆகவே முறைகேடானதும் சட்ட விரோதமானதுமான நியமத்தை அடுத்து வரக்கூடிய வாரம் ஒன்றுக்குள் ஆளுநர் ரத்து செய்து இதற்குரிய சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு ரத்து செய்யத் தவறினால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# தனியார் விடுதி ஒன்றில் மாணவி துஷ்பிரயோகம்!

## காதலன் கைது

பாடசாலை மாணவியின் நிர்வாணப்படங்களை சமூக ஊடகங்களில் பரப்பிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான காதலர் என கூறப்படும் சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நற்பிட்டிமுனை பகுதியை சேர்ந்த தனது மகளின் அந்தரங்க புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள் என எனத் தெரிவித்து கல்முனை மாநகர சபை பெண் உறுப்பினர் அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ்நிலைய சிறுவர் பெண்கள் பிரிவிற்கு முறைப்பாடு ஒன்றை வழங்கி இருந்தார்.

இதற்கமைய செயற்பட்ட பொலிஸார் மேற்படி பாடசாலை மாணவியை காதலிப்பதாக சந்தேகிக்கப்பட்ட திருக்கோவில் பகுதியை சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை மாணவியின் ஒத்துழைப்புடன் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து விசாரணையின் பின்னர் கைது செய்தனர்.

அந்த இளைஞன் பாண்டிருப்பு பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்து மாணவியை பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளதுடன் அதனை காணொளியாக தனது கைத்தொலைபேசியில் சேமித்து வைத்துள்ளார்.

பின்னர் 2 வருடங்களாகத் தொடர்ந்த காதல் பின்னர் இடைநடுவில் மாணவியின் பெற்றோர் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் இளைஞன் விரக்தியுற்று மாணவியின் பெற்றொருக்கு பல்வேறு அழுத்தங்களை தொலைபேசி ஊடாக வழங்கி வந்துள்ளார்.

இந்நிலையில் திடீரென சமூக வலைத்தளங்களில் மாணவியுடன் காதல் தொடர்பில் இருந்த காலங்களில் எடுக்கப்பட்ட நிர்வாண புகைப்படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியாகி இருந்தன.

இதனை அடுத்து மாணவியின் தாயார் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்க மைய செயற்பட்ட பொலிஸார் இளைஞனை கைது செய்து நேற்று (வியாழக்கிழமை) கல் முனை நீதிவான் முன்னிலை யில் ஆஜர்படுத்தியதை அடுத்து எதிர்வரும் மார்ச் மாதம் 8 திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் தகவல் தொழிநுட்ப பிரிவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எட்டாம்பிட்டிய
நீர் சுத்திகரிப்பு
நிலையத்தில்
கண்காணிப்பு (படம் போடவும்)

பதுளை, எட்டாம்பிட்டிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குறைப்பாடுகளை வெகுவிரைவில் நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், எட்டாம்பிட்டிய நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது அங்கு நிலவும் சில குறைப்பாடுகள் சம்பந்தமாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இவற்றை உடன் நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, அமைச்சர் உடன் பணிப்புரை விடுத்தார்.

# நாட்டின் அரசியல் வரலாற்றிலே மிகவும் தனித்துவமான மாற்றம்!

## மார்ச் மாதம் ஏற்படும் என்கிறார் அநுர

நாட்டின் அரசியல் வரலாற்றில் மிகவும் தனித்துவமான மாற்றம் எதிர்வரும் மார்ச் மாதம் ஏற்படவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு கண்டி நகரில் இந்த மக்கள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வாகன உதிரி பாகங்களின் விலை பல மடங்கு எகிறல்!

வாகன உதிரி பாகங்களின் விலை பல மடங்கு எகிறியுள்ளதாக, கொழும்பு – பஞ்சிகாவத்த வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கான கடனுதவியை வங்கிகள் வழங்க முடியாமையாலும், டொலரின் பெறுமதி வீழ்ச்சியாலுமே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.



அத்துடன், வாகன உதிரிப் பாகங்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக, ஜப்பானிய புதிய மற்றும் பழைய வாகனங்களின் உதிரி பாகங்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதுடன் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரச தலைவரின் குழப்பவாதம்

**அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் கடும் விமர்சனங்களைக் கிளப்பியுள்ளன. எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தக் கருத்துக்காக அவரை ஒரு பிடி பிடித்துள்ளன.**

**அவர் பைத்தியகாரத்தனமாக நடக்கிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச விமர்சித்திருக்கிறார். ரணில் ஒரு சர்வாதிகாரி என்று கடுமையாகச் சாடியிருக்கிறார் ஜேவிபியின் தலைவர் அனுர குடார திஸநாயக்க.**

**அவர்கள் மட்டுமல்லர் ஏனைய எதிர்கட்சியினரும்கூட இதேபோன்ற கடுமையான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றனர். 2015ஆம்ஆண்டிலில்இலங்கை எப்படி ரணில் விக்கிரமசிங்கவை நல்லவர், வல்லவர் என்று நம்பியதோ அதற்கு நேரெதிர்மாறான நிலையை இன்று அவருடைய கருத்துக்களும் செயல்களும் ஏற்படுத்தியிருக்கின்றன.**

**ரணிலின் நாடாளுமன்ற உரையில் இருந்து, தான் சொன்னபடி கேட்காமல் எதிரணியினருக்கு ஆதரவான சட்டத்தரணி சாலிய பீரிஸிடம் ஆலோசனை கேட்டுச் செயற்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவைக் கவிழ்க்கும் வகையில் அவர் செயற்பட்டிருக்கிறார் என்பது தெரிகிறது. இதற்காக அவர் தேர்தல்கள் ஆணைக்குழு எதிரணி சார்பாகச் செயற்பட்டது என்கிற எழுந்தமானமான குற்றச்சாட்டு ஒன்றையும் மறைமுகமாகத் தூக்கிப் போட்டிருக்கின்றார்.**

**அதற்கு மேலாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த முடியாதளவிற்குத் தடைகளை ஏற்படுத்திவிட்டு, இந்தத் தேர்தலை ஆணைக்குழு அறிவித்ததே சட்டபூர்வமற்றது என்றும் ரணில் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தின்படி தற்போதுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தற்காலிகக் குழுவே, அதாவது புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் வரை தமது பதவிக் காலம் முடிவடையும் வரையில்பதவியில்தொடரும்காபந்து ஆணைக்குழுவே தவிர, நிறைவேற்றுத் தீர்மானங்களை எடுக்கும் அதிகாம் அதற்கு இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.**

**இப்படி ஆணைக்குழுவின் சட்டபூர்வத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தி இருக்கும் ரணில், நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி தேர்தலை ஆணைக்குழு அறிவித்திருக்கக்கூடாது என்றே சொல்லவருகின்றார். அதனால் இனி இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றமே முடிவெடுக்கவேண்டும் என்றும் சொல்கிறார். இப்போது எழுகின்ற கேள்வி எல்லாம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டபூர்வத் தன்மை 21ஆவது திருத்தம் நிறைவேறியது முதலே இழக்கப்பட்டுவிடின் அது தேர்தல் திகதிகள் தொடர்பில் முடிவுகளை எடுத்து, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்–வரை அதனைத் தடுக்காமலும் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தின் விவாதத்திற்குக் கொண்டுவராமலும் இருந்தது ஏன்?**

**இப்போது இந்த விடயங்களை எல்லாம் நாட்டு மக்களுக்குக் வெளிப்படுத்தும் ரணில், அவற்றை ஏன் மாசி 4 இலங்கையின் சுதந்திர தினத்தின் போதோ மாசி 11 நாடாளுமன்றில் ஆற்றிய கொள்கை உரையின்போதோ தெரியப்படுத்தவில்லை? குட்டையைக் குழப்பியடிப்பதன் மூலம் தான் நினைத்ததை, விரும்பியதைச் சாதிக்கும் நிரித்தனம் தவிர இது வேறேதுமில்லை.**

# முஸ்லிம் காங்கிரஸுடன் ஒப்பந்தம் ஏதும் இல்லை

## அடித்துக்கூறுகிறார் சீ.யோகேஸ்வரன்

முல்லைத்தீவு கரைத்துறைபற்று பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸுடன் எந்தவிதமான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவில்லையெனவும் சிலர் போலியான பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர் எனவும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

மட்டு.ஊடக அமையத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அங்கு யோகேஸ்வரன் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சி உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றது. இதே நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைபற்று பிரதேசசபைக்கான தேர்தலிலும் தமிழரசுக்கட்சி வேட்புமனு தாக்கல் செய்திருந்தது. அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் சென்றும் அதுவும் நிராகரிக்கப்பட்டதால் எமது பிரதிநிதிகள் மிகவும் கவலையடைந்தனர்.

அந்த பிரதேசத்தில் உள்ள ஹிஜிறா நகர் என்ற கிராமத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. ஒரு கிராமத்திற்குள்ளேயே முழு வேட்பாளர்களையும் நிறுத்தியிருந்தது. அந்தப் பகுதியில் ஹிஜிறா நகர் தவிர்ந்த அனைத்து பகுதிகளிலும் எமது தமிழரசுக்கட்சி வேட்பாளர்களமிறக்கப்பட்டுள்ளனர்.

இங்கு ஊடகங்களில் காட்டப்படுவது போன்று ஒப்பந்தங்கள் எவையும் செய்யப்படவில்லை. சில பிரதேசசபைகள் மற்றும் கிழக்கு மாகாணசபை தொடர்பில் ஒப்பந்தங்கள் ஹக்கீமிடம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் எந்தஒப்பந்தங்களும்செய்யப்படவில்லை.

இலங்கை தமிழரசுக்கட்சியை கிழக்கில் ஓரங்கட்டவேண்டும் என்பதற்காக இதர கட்சிகள், பல முனைப்புடன் செயற்படுகின்றன. சில சம்பவங்களைப் பெரிதுபடுத்தி ஊடகங்களில் வெளியிடும் சம்பவங்கள் மலிந்துவிட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக்கட்சியின் வாக்கை இல்லாமல்செய்யவேண்டும் என்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். தமிழரசுக் கட்சியின் யாப்பில் முஸ்லிம்கள் தொடர்பிலும் உள்ளதாக சிலர் இன்றும் கூறிவருகின்றனர். 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது யாப்பு வரையப்பட்ட நிலையில் அந்தக் காலத்தில் முஸ்லிம்களுக்கென்று கட்சியிருக்கவில்லை. முஸ்லிம்கள் இலங்கை தமிழரசுக்கட்சியுடனும் அரசாங்கத்துடனுமேயே இணைந்திருந்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் ஸ்தாபக தலைவர் அஸ்ரப் அவர்களும் இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினராக இருந்தவர். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கின்றார்கள்.

ஆனால் தற்போது முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல கட்சிகள் இருக்கின்றன. தற்போது தமிழரசுக் கட்சியில் தமிழ் வேட்பாளர்களையே நாங்கள் இறக்கியுள்ளோம். இலங்கைத் தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் இன நல்லிணக்கத்தை எதிர்பார்க்கின்றது. ஆனாலும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றது. நாங்கள் எந்தவிட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை.

தற்போது நடைபெறும் கலப்பு முறை தேர்தல் முறை, அதிகாரங்களை முழுமையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறுவதில் பெரும் சிக்கல்கள் உருவாகின்றன. மட்டக்களப்பு மாநகர சபையில் 20 வட்டாரங்களில் 17 வட்டாரங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய நிலையிலும் ஆட்சியமைப்பதற்கு இதர கட்சிகளையும் நாடவேண்டிய நிலையேற்பட்டது. அவ்வாறான நிலையின்போது எங்களிடம் அந்தக் கட்சிகள் பேரம்பேசும் நிலைமையும் காணப்படுகின்றது.

அவ்வாறில்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் பிரிந்து கேட்கும்போது தமிழ்த்தேசியகூட்டமைப்பே முழுமையாக ஆட்சியமைக்கும் நிலையுருவாகலாம் என்ற அடிப்படையிலேயே பேச்சுகள் மூலம் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சி தீர்மானம் எடுத்த பின்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சுகள் நடைபெற்றன. அனைவரையும் இணைந்தே செயற்படுகின்றனர்.

நாடாளுமன்றத்தில் 10 உறுப்பினர்களும் இலங்கையில் தமிழரசுக்கட்சியில் தான் இருக்கின்றார்கள். அவர்களை நாங்கள் பிரிந்தவர்களாகக் கருதவில்லை. --எனத் தெரிவித்தார்.

# மலையகக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

## அமைச்சர் ஜீவன் தலைமையில் தொடக்கம்

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

மேற்படி இலவச உணவு திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 15 ஆயிரம் சிறார்கள் பயன்பெறுவார்கள். அதன்பின்னர் ஏனையோரையும் உள்வாங்குவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.



உலக சுகாதார அமைப்பு, உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கமைய, சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ், சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான முழுமையான பங்களிப்பை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனம் வழங்குகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் பட்டினி விகிதமும் அதிகரித்துள்ளது. மலையகத்தில் இந்நிலைமை மோசமாகவுள்ளது. அத்துடன், சிறார்கள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினையும் காணப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு நடவடிக்கையாகவே அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, இலவச சத்துணவு வேலைத்திட்டம் சிறார்களுக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலக வங்கி உட்பட சர்வதேச அமைப்புகள், மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சு உட்பட உள்நாட்டுஸ்தாபனங்களையும் இணைத்துக்கொண்டு இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பிரஜா சக்தி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் ான் அருள்சாமி தெரிவித்தார்.

# யாழில் 57 வருடங்களின் பின்னர் இருவருக்கு பேடன் பவல் விருது!

சாரணர் இயக்கதின் இளைஞர் சாரணிய பிரிவாக செயற்படும் திரிசாரணர் பிரிவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான பேடன் பவல் விருது, 57 வருடங்களின் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர்கள் இருவருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.



சாரணர் இயக்கத்தின் பேடன்பவல் பிரபுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை சாரணர் சங்கத்தால் மாத்தளை மாவட்ட செயலகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த விசேட நிகழ்வொன்றிலேயே இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் இந்த விருதுகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர் குழுவில் சிறப்பாக செயற்பட்டு அனைத்து தகைமைகளையும் நிறைவு செய்த யோ.சுதர்சனன் மற்றும் ப.சாரங்கன் ஆகியோருக்கு வழங்கி வைத்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 200 ஆவது ஆண்டை இந்த வருடம் கொண்டாடும் நிலையில் இந்த விருது 57 வருடங்களின் பின்னர் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விக்கி அவரின் சம்பந்தியான வாசுதேவவுடன் மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுகின்றார்!

## சாணக்கியன் சாட்டை

நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவவிற்கும், சி.வி.விக்கினேஷ்வரனுக்கும் இடையில் தொடர்பு உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) அமெரிக்க பாதுகாப்பு பாதுகாப்பு அதிகாரிகளின் விஜயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாடு பாரிய பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ள பின்னணியில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கனவு உலகத்தில் இருக்கிறார்களா? என்று என்ன தோன்றுகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடையும் என குறிப்பிடும் ஜனாதிபதி உட்பட அரசாங்கம் தேவையற்ற செலவுகளுக்கு நிதி செலவு செய்வதை அவதானிக்க முடிகிறது.

நாட்டு மக்களிடம் காணப்படும் பிரச்சினைகளும் அரசாங்கத்திடம் காணப்படும் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. நாட்டு மக்கள் யாரும் தேசிய சுதந்திர தினத்தை நடத்துமாறு கோரவில்லை.

ஜனாதிபதி கண்டியில் வெகுவிமர்சையான பெரஹராவை நடத்துகிறார். ஆனால் நாட்டு மக்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதி எவ்வாறான மன நிலையில் உள்ளார் என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றி அனைத்து விடயங்களையும் கேலிக்கூத்தாக்கியுள்ளார்.

பொருளாதார நெருக்கயில் இருந்து மீண்டதன் பின்னர் தேர்தலை நடத்துவதாக இருந்தால் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பதை எவராலும் குறிப்பிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது.

அரசாங்கத்திற்கு எதிராக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த நாட்டு மக்களுக்கு ஜனநாயக முறைக்கு அமைய இடமளிக்காவிட்டால் ஜனநாயகத்துக்கு எதிரான வழியில் மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள்.

மக்கள் தமது நிலைப்பாட்டை போராட்டத்தின் ஊடாக வெளிப்படுத்தும் போது இராணுவத்தை களமிறக்கி நாட்டில் அமைதியற்ற தன்மையை தோற்றுவித்து தேர்தலை முழுமையாக பிற்போடும் நோக்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கம் செயற்படுகிறது.

பொருளாதாரம் மற்றும் அரசமைப்பு என்பது வேறுபட்டது என்பதை முதலில் ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். தமது தேவைக்கு அமைய ஜனநாயகத்தையும், அரசமைப்பையும் மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.

நாட்டு மக்களின் விருப்பத்துக்கு முரணாக பலவந்தமான முறையில் ஆட்சியில் இருக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் முயற்சிக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்களின் ஒத்து ழைப்பு அவசியமாக வேண்டும். அதற்கு நாட்டு மக்களின் விருப்பத்துடனான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். ஆகவே நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிப்பதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரிகளின் வருகை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு பிரேரணையை கொண்டு வந்தவர் மற்றும் அதனை முன்மொழிந்தவர் தொடர்பில் நாட்டு மக்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் இவர்கள் தான் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவித்து அதனூடாக அரசியல் செய்தார்கள்.

இவர்கள் தான் கடந்த காலங்களில் முஸ்லிம் அடிப்படைவாதம் அரசமைப் பின் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக கடும் பிரசாரங்களை முன்னெடுத் தார்கள்.

இவ்விரு காரணிகளும் தோல்வியடைந்தால் இவர்கள் தற்போது வெளிநாட்டு சூழ்ச்சி என்ற விடயத்தை கையில் எடுத்துள்ளார்கள்.

தேர் தல் செய்ய ஏதும் இல் லாத காரணத்தால் தற்போது அமெரிக்க முதனிலை பாதுகாப்பு அதிகாரிகளைப் பற்றிக் கொண்டுள்ளார்கள்.



இந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையை கொண்டுவந்த நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவவிற் கும், சி.வி.விக்கினேஷ்வரனுக்கும் இடையில் தொடர்பு உள்ளது.

விமல் அணியினர் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக பேசும் போது சி.வி.விக்கினேஷ்வரனும் சிங்கள ஊடகங்களுக்கு அவ்வாறான தொனியில் கருத்துக்களை முன்வைத்தார். ஆகவே இவ்விரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுகிறார்களா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

உண்மையில் இவர்களுக்கு நாட்டு மக்கள் மீது அக்கறை காணப்படுமாயின் இவர்கள் மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை கொண்டு வந்திருக்க வேண்டும்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் நாட்டில் இல்லாத போது சட்டத்துக்கு முரனான வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரை செய்த அளவிற்கு மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. முறையற்ற வகையில் மின்கட்டணம் 66 சதவீதத்தால் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மின்மானி வாசிப்பாளர்கள் மின்கட்டணத்தை நிர்ணயிக்க செல்லும் போது சட்டத்துக்கு முரணாக செயற்படுத்தப்பட்டுள்ள ஒரு தீர்மானத்தை தாம் செயற்படுத்துகிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# நிபந்தனைகளில் சில தளர்வு



பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு, விதிக்கப்பட்ட நிபந்தனைகளை சிட்னி நீதிமன்றம் தளர்த்தியுள்ளது.

இதற்கமைய, அவருக்கு வட்ஸ்அப் செயலியை பயன்படுத்தவும், இரவில் வெளியே செல்வதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தமது பிணை நிபந்தனையை மாற்றுவதற்கு சிட்னி டவுனிங்சென்டர் உள்ளூர் நீதிமன்றத்தில் தனுஷ்க தாக்கல் செய்த விண்ணப்பத்தை பரிசீலித்த நீதிவான் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

டிண்டர் அரட்டை செயலி ஊடாக அறிமுகமான பெண் ஒருவருடன் சிட்னியின் கிழக்குப் புறநகர் பகுதியில் விருப்பமில்லாத உடலுறவு கொண்டமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளை தனுஷ்க எதிர்கொண்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கில் கடந்த 2022 நவம்பரில் நீதிமன்றம் தனுஷ்கவுக்கு பிணை வழங்கியபோதிலும், டிண்டர் மற்றும் பிற சமூக ஊடகங்களைப் பயன்படுத்த தடை விதித்தது. அத்துடன், இரவு நேரத்தில் வெளியில் செல்வதற்கும், பாதிக்கப்பட்ட பெண்ணுடன் தொடர்புகொள்வதற்கும் நீதிமன்றம் தடை உத்தரவு விதித்திருந்தது.

இந்த நிலையில், அவரது பிணை நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்யக் கோரி தனுஷ்க தாக்கல் செய்த விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான் ஜெனிபர் அட்கின்சன், சமூக ஊடகங்களை பயன் படுத்துவதற்கும், இரவில் வெளி யில் செல்லவும் தனுஷ்கவுக்கு அனுமதியளித்தார்.

எனினும், இரவில் நடமாட விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டமைக்கு, மனுதாரர் தரப்பு சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்தார்.

இரவில் மீண்டும் அவர் குற்றத்தில் ஈடுபட அதிக வாய்ப்புகள் உள்ளன என்று வாதிட்டார்.

எனினும், அவர் நீதிமன்றின் நிபந்தனையை மீறாமல் இருந்ததை கருத்திற்கொண்டு அவற்றைத் தளர்த்துவதாக நீதிவான் அட்கின்ஸ்ன் தெரிவித்துள்ளார்.

தனுஷ்க பிணையை மீறினால், விசாரணை அல்லது பல மாதங்கள் சிறைத் தண்டனையை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணவீக்க தரப்படுத்தலில் இலங்கை முன்னேற்றம்

உலக பணவீக்க தரப்படுத்தலில் இலங்கை சாதகமான முன்னேற்றத்தை கண்டுள்ளதாக சமீபத்திய புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹன்கின் கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட பணவீக்க தரப்படுத்தலின் பிரகாரம், இலங்கை 13 ஆவது இடத்தில் உள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் உயர் பணவீக்கம் உள்ள முதல் 5 நாடுகளுக்குள் இலங்கையும் இடம்பெற்றிருந்த நிலையில், சமீ பத்திய மாற்றம் சாதகமான முன்னேற்றமாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஜூன் மாத்தில் குறித்த தரப்படுத்தலில், உலகின் அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தது.

எவ்வாறாயினும், அண்மையில், தொகை மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் ஜனவரி மாதத்துக்கான பணவீக்கம் 54.2 சதவீதமாக குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 3 நூல்களின் வெளியீடு

காலிமுகத்திடல் 'அரகலய' போராட்ட நாட்களில், ஆரிய சிங்க என்ற சிங்கள நபருக்கு செ.அன்புராசா அடிகளாரால் எழுதப்பட்ட, 30 மடல்களின் தொகுப்பு நூலான 'அன்புள்ள ஆரியசிங்க'; தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் தனித்தனி நூல்களாக பெப்ரவரி 27ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். மறைமாவட்ட ஆயர் அருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், நல்லை ஆதினக் குருக்கள் ஸ்ரீலஸ்ரீறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம், யாழ் அமலமரித் தியாகிகளின் குருமுதல்வர் அருட்திரு.ஜெயந்தன் பச்சேக், யாழ்போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் மருத்துவர் நளாயினி ஜெயதீசன் , கோப்பாய் 'ஞானவழி' இயக்குநர் அருட்கலாநிதி சா.ம.செல்வரட்ணம், எழுத்தாளர் சி.கருணாகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

# 4 கிலோ 100 கிறாம் கஞ்சாவுடன் 32 வயது பெண் ஒருவர் கைது!



4 கிலோ 100 கிறாம் கஞ்சாவுடன் 32 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து புளியங்குளம் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தரால் நேற்று (வியாழக்கிழமை) இரவு அவர் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வீட்டு உரிமையாளரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பெண்ணும், மீட்கப்பட்ட கஞ்சா பொதியும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொரிய மொழிப் பரீட்சைக்கு 85 ஆயிரம் பேர் விண்ணப்பம்

இவ்வருடம் நடைபெறவுள்ள 7 ஆவது கொரிய மொழிப் பரீட்சைக்கு 85 ஆயிரத்து 72 இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

கொரிய மொழித் தேர்வில் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தோற்றிய சந்தர்ப்பம் இதுவாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இந்த விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டையை விநியோகிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

அதன்படி 13 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளனர்.

உற்பத்தித் துறையில் பணிகளுக்கான கொரிய மொழித் தேர்ச்சித் பரீட்சை எதிர்வரும் மார்ச் 13ஆம் திகதியும், மீன்பிடித் தொழில் வேலைகளுக்கான பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் இளைஞர் பலி

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ நுழைவாயிலுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் வெளிநாட்டவரான பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச்சப்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கார், கடவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 பேர் பொலிஸாரிடம் சிக்கினார்கள்

சொகுசு வீடொன்றில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 4 பெண்கள் உட்பட 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், சூதாட்டம் நடத்திய இடத்திலிருந்து 73 ஆயிரத்து 940 ரூபாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் பிலியந்தல – தெல்தர பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களில் வீட்டு உரிமையாளரான பெண்ணும், அவரது உறவு முறை மகளும் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், மகளும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களைக் கெஸ்பாவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பிலியந்தல பொலிஸார் மேலும் கூறினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனை விட்டு ரஷ்யா உடன் வெளியேறவேண்டும்

## ஐநா பொதுச் சபையில் தீர்மானம்

உக்ரைனில் இருந்து ரஷ்யா உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஐநா பொதுச் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத்தீர்மானத்திற்கு ஆதரவாக 141 நாடுகளும் எதிராக ரஷ்யா உள்ளிட்ட 7 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உள்ளிட்ட 32 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக ரஷ்யாவின் நட்பு நாடான சீனாவும் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.




2022 பெப்ரவரி 23 உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தொடங்கியதில் இருந்து ஐ.நா.வின் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, மனித உரிமைகள் சபை எனப் பல அங்கங்களிலும் ரஷ்ய தாக்குதலுக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவரப் பட்டுவிட்டன. ஆனால் எவற்றையும் மதித்து ரஷ்யா போரை நிறுத்தவில்லை.

உக்ரைன் மற்றும் 60 நாடுகள் இணைந்து தாக்கல் செய்த இந்த தீர்மானத்தின் மீது நேற்று விவாதம் நடைபெற்றது. இதில் ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்ததாவது:

ஐ.நா. விதிகள், சர்வதேச சட்ட விதிகளை மீறி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இதன் காரணமாக பிராந்திய அமைதி சீர்குலைந்துள்ளது. சர்வதேச அளவில் பதற்றம் எழுந்திருக்கிறது.

போர் என்பது மிகப்பெரிய பிரச்சினை. எந்தவொரு பிரச்சினைக்கும் போர் மூலம் தீர்வு காண முடியாது. உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் –



# காஸா மீது இஸ்ரேல் வான் வழி தாக்குதல்

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் போர் வானூர்திகள் மூலம் தாக்குதல் நடத்தியது.

மேற்குக் கரையில் இஸ்ரேல் புதன் கிழமை நடத்திய தேடுதல் வேட்டையின் போது 10 பாலஸ்தீனாகள் சுட்டுக் கொல்லப்பட்டனா.

இதனைக் கண்டித்து இஸ்ரேலை நோக்கி 6 ஏவுகணைகளை பாலஸ்தீன அமைப்பினா வீசியதாகவும், அவற்றில் 5 ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் கூறியது. இன்னொரு ஏவுகணை சமவெளியில் விழுந்தது.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடையிலான பதற்றம் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## யுரேனியம் செறிவூட்டல்: ஒப்புக்கொண்டது ஈரான்

தாங்கள் யுரேனியத்தை 84 சதவீதம் வரை செறிவூட்டியுள்ளதாகக் கூறப்படுவதை ஈரான் முதல்முறையாக வியாழக்கிழமை ஒப்புக்கொண்டது.

இதன் மூலம், அணு ஆயுதங்களில் பயன்படுத்தக்கூடிய அளவிலான யுரேனியம் செறிவூட்டலை அந்த நாடு மேலும் நெருங்கியுள்ளது.

இது குறித்து ஈரான் தேசிய பாதுகாப்பு சபையின் 'நூா நியூஸ்' இணையதளம், ஈரான் அணுசக்தி மையங்களில் 84 சதவீதம் வரை யுரேனியம் செறிவூட்டப்படுவதாக ஐ.நா. சாவதேச கண்காணிப்புக் குழு கூறி வருகிறது. இதனை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிததுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் உருவாக்கு–வதற்கு எதிராக, அந்த நாட்டின் மீது அமெரிக்கா மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது. இதனால் ஈரான் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் உருவாக்கு–வதற்காக இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்கு பதிலாக ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளைத் தளாத்த அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளும் சம்மதித்து 2015ஆம் திகதி ஒப்பந்தம் செய்தன.


அமெரிக்கஅதிபராகஒபாமாஇருந்தபோது மேற்கொள்ளப்பட்ட இந்த வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அடுத்து வந்த அதிபா டொனால்ட் டிரம்ப் 2018இல் அறிவித்தார். அத்துடன், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவா மீண்டும் அமல்படுத்தினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது.

அந்த நிபந்தனைகளில் ஒன்றான யுரேனியம் செறிவூட்டல் விகித வரம்பையும் ஈரான் மீறி வருகிறது. இந்த நிலையில், யுரேனியத்தை 84 சதவீதம் வரை செறிவூட்டியுள்ளதை ஈரான் தற்போது முதல்முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.

யுரேனியத்தை 90 சதவீதம் செறிவூட்டினால் அதனைக் கொண்டு அணு ஆயுதம் தயாரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# காயங்களை விரைவாக குணப்படுத்த ஈ–பண்டேஜ்




உடலில் ஏற்படும் காயங்கள் குணமடைவதை 30 சதவிகிதம் வேகப்படுத்த உதவும் ஈ–பண்டேஜ் என்ற மின்னணு கருவியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வு முடிவுகள் மருத்துவ இதழ் ஒன்றில் வெளியாகி உள்ளது. இதன்படி, 2 எலிகளுக்கு காயத்தை ஏற்படுத்தி அவற்றில் ஒன்றுக்கு புதிய இ–பேண்டேஜை பொருத்தி உள்ளனர். மற்றொரு எலியை அப்படியே விட்டுள்ளனர். இதில், ஈ–பண்டேஜ் பொருத்தப்பட்ட எலி வேகமாகக் குணமடைந்தது தெரியவந்துள்ளது.

இது குறித்து இந்த ஆராய்ச்சிக்கு தலைமை வகித்தவர்களில் ஒருவரும் நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவருமான, நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் காயங்கள் விரைவில் ஆறுவதில்லை. பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகிறது.

காயங்களை குணப்படுத்த சிரமப்படுகின்றனர். இந்த நிலையில், இந்தப் புதிய கருவி நீரிழிவு நோயாளிகளின் காயங்களை ஆற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும். இதற்கான செலவும் குறைவாகவே இருக்கும். பயன்படுத்துவதற்கும் எளிதானது. இந்தக் கருவி காயங்களை மூடிவிடும் என்பதால் தொற்று ஏற்படுவது தடுக்கப்படும்"– என தெரிவித்துள்ளார்.

# உலக வங்கி தலைவராக இந்தியர் நியமனம்



உலக வங்கியின் தலைவராக இந்திய வம்சாவளி அஜய் பங்கா நியமிக்கப்படுவதாக அமெரிக்க அதிபா ஜோ பைடன் வியாழக்கிழமை அறிவித்தார்.

இந்த அறிவிப்பில் பைடன் தெரிவித்ததாவது:

மாஸ்டர்கார்டு இங்க் நிறுவனத்தின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான அஜய் பங்கா, நீண்ட காலமாக ஒரு எதிரியை கொண்டிருக்கிறார். அந்த எதிரியை ஒழித்துக்கட்ட கடந்த ஓராண்டு காலமாகப் போராடிக்கொண்டிருக்கிறார். அந்த எதிரி பணம்.

வழக்கமான பொருளாதார நடவடிக்கையிலிருந்து வெளியேறி மக்கள் பண நடமாட்டத்திலிருந்து முழுமையாக விடுபடவேண்டும் என்று கருதுபவர். முழுக்க முழுக்க எண்ம (டிஜிட்டல்) பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் நிலையில் உலகம் மாற வேண்டும் என்பதை நோக்கிப் பயணிப்பவர்.

அவரது புதிய பொறுப்புடன், உலகம் முழுவதும் தலைவிரித்தாடும் வறுமையை ஒழிக்க நிதி ஒதுக்குவது, உலகம் எதிர்கொண்டுள்ள காலநிலை மாற்றம் மற்றும் மக்களின் மருத்துவ வசதியை மேம்படுத்துவதற்கும் அவர் முக்கியத்துவம் கொடுப்பார் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வரலாறு காணாத தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில் உலக வங்கியை அஜய் பங்கா திறன்பட வழிநடத்துவாா என்றும் பைடன் நம்பிக்கை தெரிவித்தார்.

சுமார் 30 ஆண்டுகளாக சாவதேச நிறுவனங்களில் பல்வேறு பொறுப்புகளை வகித்து வேலைவாய்ப்பு, முதலீடுகளை ஈர்த்து மாற் றத்தை ஏற்படுத்தியவா அஜய் பங்கா என்றும் பைடன் குறிப்பிட்டுள்ளார்.

அஜய் பங்காவின் நியமனத்தை உலக வங்கியின் இயக்குநாகள் உறுதி செய்யும்பட்சத்தில், உலக வங்கிக்குத் தலைமை பொறுப்பை ஏற்கும் முதல் இந்திய, சீக்கியா என்ற பெருமையை அஜய் பங்கா பெறுவார்.

இந்தியாவில் பிறந்த அஜய் பங்கா தொழில்நுட்பம், தரவு, நிதி சேவைகளில் சர்வதேச தலைவராக உய–ாந்துள்ளாா என்றும் வளாச்சி அடையும் நாடுகளை மேம்படுத்துவதில் நீண்ட அனுபவம் உள்ள அவா, பொதுத் துறை, தனியாா பங்களிப்புடன் நிதி ஒருங்கிணைப்பை மேற்கொள்வாா என்றும் அமெரிக்க அதிபா மாளிகை தெரிவித்துள்ளது. நெஸ்ட்லே நிறுவனத்தில் தனது முதல் பணியை தொடங்கிய பங்கா, பெப்சிகோ நிறுவனத்திலும் பணியாற்றினார்.

## 2 நிமிடங்களுக்கு ஒரு கர்ப்பிணிப் பெண் சாவு

குழந்தைப்பேறின்போது ஒவ்வொரு 2 நிமிடத்திற்கும் ஒரு கர்ப்பிணி பெண் இறக்கிறார் என்று ஐநா வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைப்பேறு குறித்து ஐக்கிய நாடுகள் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வின் முடிவுகள் வெளியாகியுள்ளன. கர்ப்பிணி தாய் நிலை எனும் தலைப்பிலான இந்த ஆய்வில் பல்வேறு அதிர்ச்சிகர தகவல் கள் வெளியாகியுள்ளன.

அதன்படி 2020ஆம் ஆண்டு உலகம் முழுவதும் குழந்தைப் பேறின்போது மட் டும் 2 லட்சத்து 87 ஆயிரம் பெண்கள் உயிரிழந்துள்ளமை தெரிய-வந்துள்ளது.

அதீத குருதிப்போக்கு, உயர்குருதி அழுத்தம், மகப்பேறு தொடர்பான நோய்கள், கருத்தடை சிக்கல்கள் காரணமாக இந்த இறப்புகள் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிக்கல்களை உரிய மருத்துவ வசதியுடன் தவிர்த்திருக்க முடியும் எனத் தெரிவித்துள்ள ஐநா, கருவுற்ற பெண்களுக்கு சரியான மற்றும் தரமான மருத்துவ வசதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

தொடக்கசுகாதாரநிலையங்கள், போதிய மற்றும் தரமான மருத்துவப்பணியாளர்கள், மருந்துகள் இருப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்து-வது பெரும் சவாலான ஒன்றாக இருப்பதால் இத்தகைய இறப்புகள் ஏற்படுவதாக ஐநா அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# 3000 வருடங்களுக்கு முன்பே மூளை அறுவைச் சிகிச்சை

## இஸ்ரேலிய ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு



இஸ்ரேலில் கி.மு.15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, இறந்த இரண்டு சகோதரர்களின் கல்லறையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தபோது, ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. இறந்தவர்களில் ஒருவருக்கு அவர் இறப்பதற்கு சற்று முன்பு மூளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இம்மாதிரியான அறுவை சிகிச்சைகளை மண்டை ஓட்டு அறுவை சிகிச்சைகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவை கிழக்குப் பகுதிகளில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்ததாவது:

பண்டைய நகரமான டெல்மெகிடோவில் உள்ள ஒரு கல்லறையின் அகழ்வாராய்ச்சியின்போது கிமு 1550 முதல் கிமு 1450 வரையிலான வெண்கல காலத்தில் வாழ்ந்த சகோதரர்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதில் மூத்த சகோதரர் (இவருடைய வயது 20 -மீ 40 வயதுக்குள்ளாக இருக்கலாம்) மண்டை ஓட்டில் அறுவை சிகிச்சைசெய்தற்கானதடயங்கள் இருந்தன. மண்டை ஓட்டில் 1.2 இன்ச் அளவில் ஓட்டை இருந்தது.

இது தொடர்பாக நாங்கள் நடத்திய ஆராய்ச்சியில் மூளை தொடர்பான அறுவை சிகிச்சைகள் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே உலகளவில் பரவலாக செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இந்ததடயங்கள் மூலம் இப்பகுதியின் மருத்துவம் மற்றும் கலாசாரம் குறித்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

டெல்மெகிடோ நகரம் வெண்கல காலத்தில் வணிக ரீதியாக செல்வாக்கு மிக்க பகுதியாக இருந்தது. நாங்கள் கண்டெடுத்த எலும்பு கூடுகளின் சொந்தக்காரர்களும் நல்ல செல்வ வளம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும்.

டிஎன்ஏ சோதனை மூலம் அவர்கள் சகோதரர்கள் என்பதை நாங்கள் கண்ட றிந்தோம். மூத்த சகோதரருக்கு ஏன் மூளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என உறுதியாகக் கூறமுடியவில்லை. எனினும் அவர் கால்-கை வலிப்பு, தலையில் அழுத்தம் போன்ற நோ-யினாலும், மரபணு நோயினாலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். அதற்காக அவருக்கு மூளை அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டிருக்கலாம் - என்று கூறினர்.



## பெண்கள் ரி-20 உலகக் கோப்பை

# இந்தியாவை வீழ்த்திய ஆஸி. இறுதியில்

பெண்களுக்கானரி-20உலகக்கிண்ணத் தொடரின், முதல் அரையிறுதிப் போட்டியில் 5 ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்திய ஆஸ்திரேலிய அணி, இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. எட்டு ஆண்டுகளாக நடைபெறும் பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஏழு தடவைகள் ஆஸ்திரேலிய அணி, இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளது.

கேப் டவுனில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து172 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மூனி 54 ஓட்டங்களையும் லேனிங் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் பந்துவீச்சில், சீகா பான்டே 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 173 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 167 ஓட்டங்களை மட்டுமே பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்திய அணியில் ஹர்மன்பீரித் கவுர் 52 ஓட்டங்களையும் ஜெமீமா ரொட்ரிக்கஸ் 43 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஆஸ்திரேலிய அணியின் அஸ்லி கார்ட்னர் மற்றும் டார்சி பிரவுன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகியாக, 31 ஓட்டங்களை எடுத்ததோடு2விக்கெட்டுகளையும்வீழ்த்திய அஸ்லிகார்ட்னர் தெரிவுசெய்யப்பட்டார். இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து, தென்னாபிரிக்க பெண்கள் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன.

# மூன்றாவது டெஸ்ட்டில் ஆஸி. தலைவர் விலகல்

## புதிய தலைவராக ஸ்டீவ் ஸ்மித் நியமனம்

இந்தியாவில் வந்து போடர் – கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் ஆஸ்திரேலிய அணி. நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

தொடரின் இறுதி இரண்டு போட்டிகளும் அகமதாபாத் மற்றும் இந்தூர் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இந்தூர் மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டி மார்ச் முதலாம் திகதியும், அகமதாபாத் மைதானத்தில் நடைபெறும் நான்காவது போட்டி மார்ச் 9ஆம் திகதியிலும் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாவது டெஸ்ட் போட்டி முடிவுற்றவுடன் ஆஸ்திரேலியா அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் சொந்தக் காரணங்களுக்காக ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பியிருந்தார். ஓரிரு தினங்களில் அவர் அணிக்குத் திரும்பி வந்துவிடுவார் என்று அணி நிர்வாகத்தால் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் மேலும் சில தினங்கள் ஆஸ்திரேலியாவிலேயே இருப்பார் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மூன்றாவது போட் டியில் ஸ்டீவ் ஸ்மித் அணித்தலைவர் பொறுப்பை வகிப்பார் என்று அணி நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# இந்தியாவுடன் ஒருநாள் தொடர் ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு!




இந்திய கிரிக்கெட் அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் ஆஸ்திரேலிய அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

16 பேர் கொண்ட அணியில் தென்னாபிரிக்கத் தொடரின்போது உபாதைக்குள்ளான ஜோஸ் ஹசல்வுட்டுக்கு பதிலாக ஜை ரிச்சட்சன் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

எனினும், டெஸ்ட் தொடரின்போது உபாதைக்குள்ளாகி தொடரிலிருந்து விலகிய டேவிட் வோனர் இந்த அணியில் இடம்பிடித்திருக்கிறார்.

அதேபோல, டெஸ்ட் தொடரிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது ஆஸ்திரேலியா திரும்பியுள்ள அஸ்டன் அகருக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.

பட் கம்மின்ஸ் தலைமையிலான ஒருநாள் அணியில், டேவிட் வோரனர், ட்ராவிஸ் ஹெட், மார்னஸ் லபுசேன், ஸ்டீவ் ஸ்மித், க்ளென் மக்ஸ்வெல், மிட்செல் மார்ஷ், அலெக்ஸ் கரி, ஜோஷ் இங்க்லிஸ், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மிட்ச்செல் ஸ்டார்க், ஜை ரிச்சர்ட்சன், அடம் ஸம்பா, கமரூன் கிரீன், அஸ்டன் அகர், சீன் அபோட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி மும்பையிலும், இரண்டாவது. மூன்றாவது போட்டிகள் முறையே மார்ச் 19 ஆம் திகதி விசாகப்பட்டினத்திலும், மார்ச் 22 ஆம் திகதி சென்னையிலும் நடைபெறவுள்ளன.




உலகின்பிரபலகால்பந்தாட்ட கிளப் அணிகளில் ஒன்றான பார்சிலோனா அணிக்காக மீண்டும் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி விளையாட உள்ளார் என்று பல்வேறு ஊகங்கள் சொல்லப்பட்டு வருவதால் அவரது ரசிகர்கள் பரபரப்பாக இருக்கிறார்கள். மெஸ்ஸிக்கும் பார்சிலோனா அணிக்கும் இடையிலான பந்தம் உயிரும், மூச்சும் போன்றது.

35 வயதான மெஸ்ஸி, பிறந்தது என்னவோ அர்ஜென்டினாவில்தான். ஆனால், அவரை வளர்த்தெடுத்தது ஸ்பெயின்தான். ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா அணிதான் அவரது திறனை அடையாளம் கண்டு இளம் வயதிலேயே வாய்ப்புக் கொடுத்தது. 2000ஆம் முதல் 2021 வரையில் பார்சிலோனா அணியின் அங்கமாக மெஸ்ஸி இருந்தார்.

கால்பந்தாட்ட களத்தில் சர்வதேச போட்டிகள் என்றால் ‘நீ வேறு நாடு, நான் வேறு நாடு’ என ரசிகர்கள் பிரிந்து நின்றாலும் கிளப் அளவிலான போட்டியில் அப்படி பிரிந்து நிற்க மாட்டார்கள். அதன் காரணமாகவே பார்சிலோனாவின் முகமாக மெஸ்ஸி அறியப்பட்டார்.

2004 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் பார்சிலோனா சீனியர் அணிக்காக 520 போட்டிகளில் 474 கோல்களை அவர் பதிவு செய்திருந்தார்.

இருந்தும் 2021 ஜூலையில் மெஸ்ஸி, பார்சிலோனா இடையிலான பந்தம் முடிவுக்கு வந்தது. அவர் இனி தங்கள் அணிக்காக விளையாட மாட்டார் என பார்சிலோனா அறிவித்தது. மெஸ்ஸியும் கண்ணீர் மல்க விடைபெற்றார்.

அதன் பின்னர் பிரான்ஸ் நாட்டின் பிஎஸ்ஜி அணியில் இணைந்தார். இது இரண்டு ஆண்டு கால ஒப்பந்தம் ஆகும். 2021 முதல் 2023 ஜூன் வரையிலான ஒப்பந்தம். பிஎஸ்ஜி அணியுடனான மெஸ்ஸியின் ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் முடிவுக்கு வர உள்ளது.

இந்தச் சூழலில் அண்மையில் மெஸ்ஸியின் தந்தை ஜோர்ஜ், பார்சிலோனா அணியின் தலைவரை சந்தித்துள்ளார். இதனை ஸ்பெயின் நாட்டு ஊடகங்கள் உறுதி செய்துள்ளன. இதனால் மெஸ்ஸி, பார்சிலோனாவுக்கு திரும்புவது குறித்து ஆலோசித்து வருவது போல தெரிகிறது என ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பத்திரிகையாளர் ஜெரார்ட் ரொமேரியோ தெரிவித்துள்ளார். அதில் மெஸ்ஸி அதிக ஆர்வத்துடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் மெஸ்ஸியின் ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

# டெல்லி - ஹைதராபாத் ஐ.பி.எல். அணிகளுக்கு புதிய தலைவர்கள்

இந்த வருட ஐ.பி.எல். கிரிக்கெட் தொடருக்கான டெல்லி கபிடல்ஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகளுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டெல்லி கபிடல்ஸ் அணியின் தலைவராக ஆஸ்திரேலியாவின் டேவிட் வோனர் அறிவிக்கப்பட்டுள்ளார். முழங்கையில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக தற்போது நடைபெற்று வரும் இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் எஞ்சிய இரு போட்டிகளிலிருந்தும் விலகி, நாடு திரும்பியுள்ள டேவிட் வோனர், டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஒருநாள் தொடரில் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தொடரில் டெல்லி அணியின் தலைவராகவிருந்த ரிப்பண்ட், கார் விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருகின்ற நிலையில், அவருக்குப் பதிலாக, வோனர் அணித்தலைவராக்கப்பட்டுள்ளார்.

டேவிட் வோனர் இதற்கு முன்னதாக சன்ரைசஸ் ஹைதராபாத் அணிக்குத் தலைமை தாங்கி, 2016 ஆம் ஆண்டு அந்த அணிக்கு சம்பியன் கிண்ணத்தை வென்று கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் தலைவராக தென்னாபிரிக்காவின் எய்டன் மார்க்ரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபகாலமாக மூன்றுவகை கிரிக்கெட்டிலும் சிறப்பாக விளையாடிவரும் எய்டன் மார்க்ரம், அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற எஸ்.ஏ.20 தொடரில், தனது தலைமையிலான சன்ரைசஸ் ஈஸ்டன் கப் அணிக்கு முதல் சம்பியன் பட்டத்தை வென்று கொடுத்திருந்தார்.

சன்ரைசஸ் ஹைதராபாத் அணி நிர்வாகத்தின் மற்றொரு அணியான, சன்ரைசஸ் ஈஸ்டன் கப் அணி சம்பியன் பட்டம் வென்றதன் பின்னணியில், மார்க்ரமுக்கு இந்தத் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 16ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர், மே 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



# வருடம் முழுவதுமான சுற்றுலாத் தளமாக இலங்கையை மாற்ற நடவடிக்கை – ரணில்











வருடம் முழுவதுமான சுற்றுலாத் தளமாக இலங்கையை மாற்றியமைத்து, சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி மாவட்ட சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடன் வியாழக்கிழமை மாலை நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் 'சுற்றுலாத்துறையின் இருப்பு மற்றும் சவால்களை வெற்றிகொள்ளல்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பு ஹிக்கடுவ சிட்ரஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அண்மைய பொருளாதார வீழ்ச்சியினால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவற்றை வெற்றிகொண்டு, சுற்றுலாத்துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

20 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவருவதற்கும், ஒரு சுற்றுலா பயணி, நாளொன்றுக்கு 500 டொலர்களை செலவிடக்கூடிய வகையில், சுற்றுலாப் பயணிகளுக்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் உடனடியாக இவை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்..

அத்துடன், இலங்கை தொடர்பில் சிறந்த பிரச்சாரம் ஒன்றை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் சட்டம் – ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் இவ்வருட சுதந்திர தின விழா பெருமையுடன் நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களின் பின்னர் சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் இருந்து விலகியிருந்ததாகவும், அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இலங்கையில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ள செய்தியை உலகுக்கு எடுத்துச் செல்வது அவசியமானது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனு நாணயக்கார, சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ன டி சில்வா, கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, சம்பத் அத்துகோரள, தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே, காலி மாவட்ட செயலாளர் சாந்த வீரசிங்க உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஹிக்கடுவ நகருக்கு நடந்து சென்ற ஜனாதிபதி அங்குள்ள வர்த்தகர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

வர்த்தக நிலையங்கள் சிலவற்றுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, வர்த்தக விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்தார். அங்கு ஜனாதிபதிக்கு வர்த்தகர்களின் அமோக வரவேற்பும் கிடைத்தது.

ஜனாதிபதி ஒருவர் தமது வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்து, பிரச்சினைகளை ஆராய்ந்தது இதுவே முதல் தடவை என்றும், அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஹிக்கடுவ நகரில் கூடியிருந்த மக்களின் விபரங்களையும் ஜனாதிபதி இதன்போது கேட்டறிந்தார்.

# யாழ்ப்பாண தமிழ் அகராதி நூலுக்கு தமிழ்நாட்டு விருது






'யாழ்ப்பாணத்தமிழ் அகராதி' என்ற நூல் அகராதி, கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் என்னும் வகைப்பாட்டில் 2019 ஆம் ஆண்டு சிறந்த நூலாகத் தமிழ் நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது பெப்ரவரி 20ஆம் நாள் தமிழ்நாட்டில் வைத்து வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சித் துரறயின் சிறந்த நூல்களுக்கான பரிசில் வழங்கும் திட்டத்தில் நூலாசிரியருக்கான பாராட்டுச் சான்றிதழும் நூலுக்கான பரிசில் தொகை இந்திய ரூபாயில் 30 ஆயிரமும் நூலை உருவாக்கிய நடராசா சிறிரஞ்சனுக்கு தமிழ் மொழித் தினத்தில் வழங்கி தமிழ்நாட்டு அரசு கௌரவம் அளித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட ஒரு நூலுக்கும் அதன் ஆசிரியருக்கும் தமிழ்நாட்டு அரசால் இந்த உயரிய கௌரவம் கிடைக்கப்பெற்றமை யாழ்ப்பாண இலக்கிய ஆர்வலர்களைப் பெருமைகொள்ளவைத்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2023 இல் வெளியிடப்பெற்றது.